ISBN:978-81-687049-8-5

108

செந்தமிழறிஞர்கள்

மு மேத்தா





பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/170-%E0%AE%AE%E0%AF%81%E0%AE%AE%E0%AF%87%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE_1945

செந்தமிழ்சிற்பிகள்

மு.மேத்தா (1945)



அறிமுகம்

மு.மேத்தா (பிறப்பு: செப்டெம்பர் 5, 1945) (முகமது மேத்தா) தமிழ் கவிஞர். வானம்பாடி இதழுடன் இணைந்து இயங்கியவர். வானம்பாடி கவிதை இயக்கம் உருவாக்கிய கவிஞர். திரைப்பாடலாசிரியர். நாவலாசிரியர். மு.மேத்தா மதுரை தியாகராசர் கல்லூரியில் பயில்கையிலேயே இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தார். 1971-ல் அவர் கோவை அரசுக் கலைக்கல்லூரிக்கு பணிமாற்றம் பெற்று வந்தார். புவியரசு, சிற்பி, பாலா, தமிழ்நாடன் முல்லை ஆதவன், ஞானி, ஜனசுந்தரம், அக்னிபுத்திரன் ஆகியோருடன் அறிமுகம் ஏற்பட்டது. வானம்பாடி கவிதை இயக்கம் உருவானபோது அதில் பங்கெடுத்தார். வானம்பாடி இதழில் கவிதைகள் எழுதினார். மேத்தா மரபை நிராகரிக்காத புதுமை தேவை என கருதியவர். 'மரபுக்கும்

புதுமைக்கும் நான் பாலமாக இருப்பேன்' என்று முதன் முதலாக நடந்த வானம்பாடிகள் கூட்டத்தில் கூறினார். 'இந்தப் பூமி உருண்டையை புரட்டி விடக்கூடிய நெம்புகோல் கவிதையை உங்களில் யார் பாடப் போகிறீர்கள்' என்ற கேள்வியை; வானம்பாடிகளை நோக்கி முன்வைக்கிற கவிதை எழுதினார். அது வானம்பாடி முதல் இதழிலே வெளிவந்தது. வானம்பாடி இயக்கத்தின் முத்திரை வரிகளில் ஒன்று அது. மு.மேத்தா எழுதிய "*தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி*" என்ற கவிதை புகழ்பெற்றது. தொடர்ந்து கண்ணீர்ப்பூக்கள், என்னும் தொகுதி வெளிவந்து அவர் அன்று தமிழில் எழுதிய புகழ்பெற்ற கவிஞர்களில் ஒருவராக ஆனார்.

1975-ல் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. மு.மேத்தா 'இந்தியா இந்திரா 75' என்னும் தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டார். வானம்பாடிகளில் சிற்பி போன்றவர்கள் அவசரநிலை கெடுபிடிகளால் ஒதுங்கிக்கொண்டனர். ஆகவே வானம்பாடி இயக்கம் பிளவுபட்டு இதழ் நின்றது.

நாயகம் ஒரு காவியம்

மு.மேத்தா தன் பெரும்படைப்பாக எழுத எண்ணியது. நாயகம் ஒரு காவியம். கண்ணதாசனின் ஏசு காவியத்தை முன்னுதாரணமாகக்கொண்டு புதுக்கவிதையில் எழுத தொடங்கிய அந்நூல் பதுருப் போருடன் நின்றுவிட்டது. அதன் பிறகான நபி வரலாற்றை எழுதும் உடல்நிலை அவருக்கு அமையவில்லை என ஒரு பேட்டியில் சொல்கிறார். 2013-ல் ரஹ்மத் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

(😊)(😊)(😊) ΩΩΩΩΩΩΩΩΩΩΩΩΩΩ (😊)(😊)(😊)

மு. மேத்தா (Mu. Metha) தமிழகத்தின் மிகச்சிறந்த புதுக்கவிஞர்களில் ஒருவரும், பேராசிரியரும், திரைப்பாடலாசிரியரும் ஆவார். இவர் 'வானம்பாடி' கவிதை இயக்கத்தின் மூலம் அறியப்பட்டவர் மற்றும் "ஆகாயத்துக்கு அடுத்த வீடு" கவிதை தொகுப்பிற்காக 2006-ல் சாகித்ய அகாதமி விருது பெற்றவர். இவர், 1945 செப்டம்பர் 5-ல் பிறந்தார்.
இந்தக் காணொளியில் கவிஞர் மு. மேத்தாவுடன் ஒரு நேர்காணலைக் காணலாம்:



22:18

'அந்த திமிர்தான் என்னை இயங்கவைக்குது'- கவிஞர் ...

Hindu Tamil Thisai
YouTube• 5 Sept 2021

மு. மேத்தா பற்றிய முக்கிய தகவல்கள்:

- **பிறப்பு:** செப்டம்பர் 5, 1945, பெரியகுளம்.
- **பணி:** சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
- **சிறப்பு:** புதுக்கவிதை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் வகிப்பவர். இவர் வானம்பாடி இதழுடன் இணைந்து இயங்கியவர்.
- **விருதுகள்:** 2006-ல் "ஆகாயத்துக்கு அடுத்த வீடு" நூலுக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்.
- **படைப்புகள்:** கவிதை, நாவல், மற்றும் திரைப்பாடல்கள் எழுதியுள்ளார். இவர் ஒரு சொற்பொழிவாளர் மற்றும் எழுத்தாளர்.
- **திரைத்துறை:** பல புகழ்பெற்ற திரைப்பாடல்களை எழுதியுள்ளார்.

கவிஞர் மு. மேத்தாவின் முக்கிய கவிதை நூல்கள்:

- கண்ணீர்ப்பூக்கள்
- ஊர்வலம்
- ஆகாயத்துக்கு அடுத்த வீடு (சாகித்ய அகாதமி விருது பெற்றது)
- மனிதம் (நூல்)

இவர் மக்கள் கவிஞராக அறியப்படுகிறார்.

மு. மேத்தா	
பிறப்பு	முகமது மேத்தா செப்டம்பர் 5, 1945 (அகவை 80) பெரியகுளம், தமிழ்நாடு, இந்தியா
தொழில்	கவிஞர் பாடலாசிரியர்
குறிப்பிடத்தக்க விருதுகள்	சாகித்திய அகாதமி விருது (2006)
துணைவர்	சையது ராபியா (எ)மல்லிகா மேத்தா[1]
பிள்ளைகள்	5 மகள்கள்



மேத்தா சாகித்ய அக்காதமி விருது பெறுதல்

திரைப்படப் பட்டியல்

ஆண்டு	திரைப்படம்	இசையமைப்பாளர்	குறிப்பு
1981	அனிச்சமலர்	சங்கர் கணேஷ்	முதல் திரைப்படம்
1981	பன்னீர் புஷ்பங்கள்	இளையராஜா	
1982	ஆகாய கங்கை	இளையராஜா	தேனருவியில் நனைந்திடும் மலரோ
1985	நான் சிகப்பு மனிதன்	இளையராஜா	பெண் மானே சங்கீதம்

1985	இதய கோவில்	இளையராஜா	யார் வீட்டில் ரோஜா
1985	உதயகீதம்	இளையராஜா	பாடு நிலாவே
1985	உன்னை விடமாட்டேன்		ஞாயிறு ஒளி மழையில்
1985	உன் கண்ணில் நீர் வழிந்தால்		
1986	மரகத வீணை	இளையராஜா	ஒரு பூவனக்குயில் மாமரத்துல
1987	ரெட்டை வால் குருவி	இளையராஜா	ராஜராஜ சோழன் நான்
1987	வேலைக்காரன்	இளையராஜா	அனைத்துப் பாடல்களும்
1987	கிருஷ்ணன் வந்தான்	இளையராஜா	
1987	சிறைப்பறவை		
1987	மைக்கேல் ராஜ்	சந்திரபோஸ்	காலம் பொறந்தாச்சு சின்னமயிலே
1988	கலியுகம்		
1988	சொல்ல துடிக்குது மனசு	இளையராஜா	
1988	தாய்ப்பாசம்	சந்திரபோஸ்	
1989	அன்னக்கிளி சொன்ன கதை		
1989	எம்புருஷன்தான் எனக்குமட்டுந்தான்	இளையராஜா	
1990	கேளடி கண்மணி	இளையராஜா	கற்பூர பொம்மையொன்று

1991	இதயவாசல்		
1991	தந்துவிட்டேன் என்னை	இளையராஜா	தென்றல் நீ தென்றல் நீ
1992	உன்னை வாழ்த்தி பாடுகிறேன்	இளையராஜா	
1994	பிரியங்கா	இளையராஜா	
1996	பூமணி	இளையராஜா	எம்பாட்டு எம்பாட்டு
1997	சூரிய வம்சம்	எஸ். ஏ. ராஜ்குமார்	நட்சத்திர சன்னலில்
1998	சிம்மராசி	சிற்பி	
1998	கும்பகோணம் கோபாலு	இளையராஜா	
1999	ராஜஸ்தான்	இளையராஜா	
1999	தொடரும்	இளையராஜா	
1999	நிலவே முகம் காட்டு		
2000	பாரதி	இளையராஜா	மயில்போல பொண்ணு ஒன்னு
2000	இளையவன்	இளையராஜா	
2001	காசி	இளையராஜா	என் மனவானில் சிறகை
2002	இவன்	இளையராஜா	
2002	என் மனவானில்		
2003	பிதாமகன்	இளையராஜா	அடடா அகங்கார அரக்க

2005	கரகாட்டக்காரி	இளையராஜா	
2005	சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி	இளையராஜா	
2006	உள்ள கடத்தல்	பரத்வாஜ்	
2007	மாயக்கண்ணாடி	இளையராஜா	
2007	உதயம்		
2008	தனம்	இளையராஜா	
2009	கண்ணுக்குள்ளே		
2009	மத்திய சென்னை		
2009	அழகர் மலை	இளையராஜா	
2010	நந்தலாலா	இளையராஜா	
2011	அய்யன்	இளையராஜா	
2012	அஜந்தா	இளையராஜா	
2013	மத்தாப்பூ		
2013	மறந்தேன் மன்னித்தேன் [8]		
2014	ஒரு ஊருல	இளையராஜா	

https://www.keetru.com/puthiyakaatru/aug06/mehtha.php

கேள்வி : மேத்தா என்ற கவிஞனின் உருவாக்கம் குறித்து சொல்லுங்களேன்?



சின்னவயதிலிருந்தே எனக்கு தமிழில் தமிழ்க் கவிதைகளில் ஈடுபாடு அதிகம். நண்பர்கள் சேர்ந்து ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு படிக்கிறபோதே கையெழுத்து பத்திரிகை நடத்தினோம்.

ஏறத்தாழ ஒரு பத்திரிகை ஆசிரியனுடைய பொறுப்பை வகிக்கிற நிலை அது. கதை, கவிதை, கட்டுரை, திரைப்பட விமர்சனங்கள் எல்லாம் கூட எழுதிக்கிட்டிருந்தேன். என்னுடைய நண்பர்கள் இளைஞர்களுடைய வேறுவிதமான பொழுது போக்குகளில் ஈடுபடாமல் எழுதுறது, விவாதிக்கிறது என்ற சூழலில் வளர்ந்தார்கள். அவர்களோடு நானும் வளர்ந்தேன். இயல்பாகவே எனக்கு இருக்கக் கூடிய தமிழ்ப் பற்றும், தமிழ் ஆர்வமும் பாரதிதாசன் கவிதைகளில் இருந்த அளவுகடந்த ஈடுபாடும் இவையெல்லாம் சேர்ந்து என்னை கவிதை உலகத்திற்குள் கொண்டு வந்தது என்று நினைக்கிறேன்.

கேள்வி : புதுக்கவிதையை வெகுஜனத் தளத்திற்கு கொண்டு சென்றதில் உங்களின் பங்களிப்பு முக்கியமானது. ஆனால் தொடக்கத்தில் நீங்கள் மரபுக் கவிஞராகவே இருந்திருக்கிறீர்கள். மரபிலிருந்து புதுக்கவிதைக்கு நகர்ந்தது எப்பொழுது?

தொடங்கியபோது மரபுக் கவிதைக் காரனாகத்தான் தொடங்கினேன். அன்றைக்குத் தமிழ்நாட்டில் இளைஞர்களுடைய மனப்போக்கில் தீவிரமான எண்ணங்களை விதைத்துக் கொண்டிருந்த திராவிட இயக்கம் எனக்குள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அண்ணா, கலைஞர் இவர்களுடைய எழுத்துக்களும் பெரியாருடைய சிந்தனைகளும் தமிழ்ச் சமூகத்தை பாதித்தபோது அந்த சமூகத்தின் ஒரு சிறுதுளியாகிய நானும் அதிலே தாக்குண்டேன். 16, 17 வயதில் நல்ல மரபுக் கவிதைகள் செப்பனிடப்பட்ட செம்மையான வடிவத்தில் வெளிவரத் தொடங்கின. இதன்பிறகு 1968ல் நான் அரசுக் கல்லூரியிலே ஆசிரியராக பணிக்குச் சேர்ந்தேன். அப்பொழுது என்னோடு பணிக்கு சேர்ந்தவர் தமிழகத்தில் சிறந்த கவிஞராகவும், விமர்சகராகவும் மதிக்கப்படக் கூடிய பாலா அவர்கள்.

பாலாவும் நானும் இலக்கிய விவாதங்களில் எங்களுடைய பொழுதுகளை கழித்தோம். அவர் நிறைய ஆங்கில இலக்கியங்களை எனக்கு அறிமுகப்படுத்துவார். பல்வேறு மொழிகளின் கவிதைச் சூழல் பற்றி என்னிடத்திலே பேசுவார். அப்பொழுது நான் புதுக்கவிதையை ஏற்றுக் கொள்ளவில்லை. 'புதுக்கவிதை சோம்பேறிகளின் சொப்பனம்'என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்குக் காரணம் மரபுக் கவிதை என்பது பலகாலப் பயிற்சிக்குப் பிறகு வரக்கூடிய ஒரு வடிவம். 'புதுக்கவிதை என்பது சொல்லுவதை எல்லாம் எப்படி வேண்டு மானாலும், எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் சொல்வது' என்று புதுக் கவிதைக்காரர்கள் சொல்வதை நான் ஒத்துக் கொள்வதில்லை. அதே சமயத்தில் அந்தக்கால கட்டத்தில் புதுக்

கவிதையை எழுதிக் கொண்டிருந்தவர்கள் - ஏறத்தாழ இறக்குமதி செய்து கொண்டிருந்தார்கள் - வெளிநாட்டில் இருக்கின்ற அறிவு ஜீவிகளினுடைய, கவிஞர்களுடைய படைப்புகளினுடைய தாக்கத்தை தமிழில் இறக்குமதி செய்து கொண்டிருந்தார்கள். இந்த மண்ணிலிருந்து முளைக்காத மரங்கள் அவை. தொட்டிச் செடியாக கொண்டு வரப்பட்டு இங்கே போற்றப்பட்டன. இயல்பாக எனக்கு அதிலே ஈடுபாடு இல்லை.

1971ம் ஆண்டு கோவை அரசுக் கலைக் கல்லூரிக்கு மாற்றலாகச் சென்றேன். அங்கு அற்புதமான ஒரு கவிஞர்களுடைய வட்டம் அமைந்தது. புவியரசு, சிற்பி, பாலா, தமிழ்நாடன் முல்லை ஆதவன், அக்னிபுத்திரன் இப்படி தமிழ் நாட்டின் மிகச்சிறந்த கவிஞர்களெல்லாம் கோவையிலே இணைந்து, ‘வானம்பாடி’என்ற ஒரு இதழைத் தொடங்கினோம்.

வானம்பாடியின் சூழல் அமைப்பு, சிற்பி-மீரா இப்படி பலகவிஞர்களின் கூட்டுறவு; அதே சமயம் ஞானி, ஜனசுந்தரம் போன்ற மார்க்சிய சித்தாந்தவாதிகளின் இணைப்பு, தத்துவ வாதிகளுக்கும் இலக்கியவாதிகளுக்கும் ஏற்பட்ட மோதல்கள் இவையெல்லாம் சேர்ந்து புதுவிதமான பரிமாணத்திற்கு என்னைக் கொண்டுவந்தன என்று நான் நினைக்கிறேன்.

அப்பொழுதுதான் நான் புதுக்கவிதையை எழுதத் தொடங்குகிறேன். அப்போது கூட மரபுக் கவிதையைத் தாக்குகிற போக்கையும், மரபை முழுக்க முழுக்க தகர்க்கிற போக்கையும் நான் எதிர்த்தேன். ‘மரபுக்கும் புதுமைக்கும் நான் பாலமாக இருப்பேன்’என்று முதன் முதலாக நடந்த வானம்பாடிகள் கூட்டத்திலே நான் அறிவித்தேன். அப்போதுதான், ‘இந்தப் பூமி உருண்டையை புரட்டி விடக்கூடிய நெம்புகோல் கவிதையை உங்களில் யார் பாடப் போகிறீர்கள்’என்ற கேள்வியை; வானம்பாடிகளை நோக்கி முன்வைக்கிற கவிதையை எழுதினேன். அது வானம்பாடி முதல் இதழிலே வெளிவந்தது.

இன்றைக்கும் நான் அப்படித்தான் இருக்கிறேன். மரபை முழுக்க சிதைக்கிற போக்கை நான் ஒப்புக் கொள்ளவில்லை. தேவையற்ற மரபுகளை தூக்கி எறிவதும், தேவையான போது மரபுகளை நாம் தேர்வு செய்து கொள்வதும் தேவை என்று கருதுகிறவன் நான்.

கேள்வி : இறக்குமதி செய்யப்பட்டவற்றை அப்போதைய புதுக்கவிதைக்காரர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னீர்கள். இதற்கு மாற்றாக வானம்பாடி எதை முன்வைத்தது?

‘எழுத்து’காலகட்டத்துக் கவிதைகள், ‘கசடதபற’ காலகட்டத்துக் கவிதைகள் இவையெல்லாம் வேற்றுமொழி சிந்தனையாளர்களின் எண்ணங்களை எல்லாம் தமிழில் விதைக்கத் தொடங்கிய முயற்சியில் ஈடுபட்டது. அவை என்னை ஈர்க்கவில்லை. என்னை மட்டுமல்ல தமிழ் வாசகர்களையும் அது ஈர்க்கவில்லை. ஆதலால்தான் அப்பொழுது புதுக் கவிதைகள் வெற்றியடையவில்லை. ‘தோற்றுக் கொண்டிருந்த புதுக் கவிதையை வெற்றியடைய வைத்தவர்கள் யார்? என்று கேட்பீர்கள்’என்று சொன்னால் வானம்பாடி கவிஞர்களும், மரபிலே எழுதி வெற்றி பெற்று புதுக் கவிதையை எழுதத் தொடங்கிய போது, அப்துல் ரகுமானைப் போன்று சிற்பியைப் போன்று, நா.காமராசனைப் போன்று புதுமையும் அவர்களது எழுதுகோலுக்கு வந்தது. மரபின் பலமும் அந்த எழுதுகோலுக்கு இருந்தது. மரபின் பலமும்,

புதுமையினுடைய நலமும் வளமும் சேர்ந்து புறப்பட்ட போது புதுக்கவிதை தமிழ்நாட்டில் வெற்றி பெற்றது.

கேள்வி : ஒரு வீச்சுடன் உருவான வானம்பாடி இயக்கம் ஏன் தமிழகத்தில் தேங்கி நில்லாமல் போனது?

தேக்கத்திற்கு வந்தது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆட்சிக்கு வருகிறது ஒரு கட்சி. அந்த கட்சியை மக்கள் அனுமதிக்கிற வரைக்கும், அல்லது எதிர்க்கட்சிகள் தொல்லை செய்து கவிழ்க்காத வரைக்கும் அந்த கட்சியினுடைய ஆட்சி நடைபெறுகிறது. அந்த கட்சி சில சீர்திருத்தங்களைச் செய்கிறது. அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பிறகு, கட்சி அழிந்து விடவில்லை. அந்த ஆட்சிக்குப்பதில் வேறு ஆட்சி வருகிறது. அதுபோல வானம் பாடிகளின் பணி, தொடக்க காலத்திலே வீரியமிக்க கவிஞர்களின் ஒன்று சேர்ந்தகுரல் தமிழகத்தில் திருப்பத்தை உருவாக்கியது. வானம்பாடியைத் தொடர்ந்து 50க்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள் உருவாகின.

தமிழகத்தினுடைய இலக்கியப் போக்கில் அது ஒரு புதிய பிரமிப்பான பெருமையை தோற்றுவித்தது. மனிதனைப் பாடாத, மனித நலத்தைப் பாடாத, எதையும் நாங்கள் புறக்கணிப்போம் என்று மக்களிடத்திலே குரலெழும்புமாறு செய்தது வானம்பாடியினுடைய வேலை. தன்னுடைய காலகட்டத்தில் அது சாதிக்க வேண்டிய சாதனைகளை எல்லாம் நிகழ்த்தியது. ஒரு கூட்டிலே வளர்ந்த பறவைகள் சிறகுகள் முளைத்து தனித்தனி அரசுகள் அமைத்து பறந்து போய்விட்டன என்று சொல்லலாமே தவிர, வானம்பாடி சிதறிப்போய் விட்டது என்று சொல்ல முடியாது. அதனுடைய பணி முடிந்தது. வானம்பாடிக்காரர்கள் ஆங்காங்கே அவரவர்கள் ஒரு சிறந்த சிந்தனையின் தளமாக இருக்கிறார்கள்.

கேள்வி : புதுக்கவிதையின் சமகால வரலாற்றைப் பேசுபவர்கள், 'வெறும் வார்த்தைக் கூட்டங்களும், கோஷங்களும் தான் வானம்பாடிக் கவிதைகள்'என்ற விமர்சனத்தை முன் வைத்திருக்கிறார்களே. நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

அம்மா என்பது கூட வெறும் வார்த்தைதான். தாய் என்பது கூட வெறும் வார்த்தை தான். வார்த்தையாக பார்க்கிற போது வெறும் வார்த்தை. உணர்வாகப் பார்க்கிறபோது அது உயிர். இப்படி சொல்கிறார்களே இவர்கள் வார்த்தை களுக்குப் பின்னாலே அலைகிறவர்கள். இவர்கள் சமூகத்தைப் பற்றியோ மனித குலத்தின் மேன்மை களைப் பற்றியோ கருதாதவர்கள். தனக்குள்ளே முழ்கிப்போய் எதையோ தேடிக் கொள்கிறார்கள். இவர்கள் இங்கே இருப்பதை விட எங்காவது மலைமுகடுகளில் சென்று உட்கார்ந்து தவம் செய்து கொண்டிருப்பது நன்று. இவர்கள் மிகச்சிறிய ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள். தொடர்ந்து 1,000 பேர் 2,000 பேர் படிக்கிற பத்திரிகைகளை நடத்திக் கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தொடர்ந்து பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஜனங்களை சந்திக்கிறவர்கள்.

எங்களுக்கும் மக்களுக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது. வெறும் எழுத்தோடு மட்டுமல்ல; நேரடியான பங்களிப்பிலும் நாங்கள் இடம் பெறுகிறோம். எங்களுக்கிருக்கிற திமிர், எங்களுடைய படைப்புகளின் மீது எங்களுடைய செயல்பாடுகளின் மீது எங்களுக்கிருக்கிற நம்பிக்கை - ஒருவர் கூறுவதற்கு பதில் சொல்ல வேண்டும் என்கிற அந்தக் கடமையிலிருந்து எங்களைத் தவற வைத்து விடுகிறது. அதனால் இவர்கள் சொல்லுவ தெல்லாம் பொருளாகிக் கொண்டிருக்கிறது. 'வானம்பாடி' என்பது வெற்று கோஷமல்ல. ஒரு காலகட்டத்தில் பாரதி எப்படி தமிழ்க் கவிதையின் திசையைத் திருப்பினானோ அதுமாதிரி, 'மனிதனைப் பாடாத, சமூகத்தைப்

பாடாத, மக்களைப் பற்றி கவலைப்படாத கலை கலையல்ல' என்ற மாபெரும் ஒரு கருத்தைத் தோற்றுவித்தது வானம்பாடி. இதை இவர்கள் சொல்வதைப் போல எளிதாக எள்ளி நகையாடி விட முடியாது.

கேள்வி : கவிதை ஆக்கம், திரைப்படப் பாடல் ஆக்கம் இவை இரண்டுக்குமான தனித் தன்மையாக எதைப் பார்க்கிறீர்கள்?

கவிதை என்னுடைய சொந்த படைப்பு. என்னுடைய சொந்த படைப்பில் வேறுயாரும் குறுக்கிடுவதற்கு இடம் கிடையாது. ஆனால் என்னுடைய பாடலில் பிறர் கைவைப்பதை நான் அனுமதித்தாக வேண்டும். அதுதான் பாடலாசிரியன் என்கிற பணிக்கு நான் செய்கிற மரியாதை. கவிதை என்பது ஒரு கவிஞனுடைய சுதந்திர மலர்ச்சி. ஆனால் திரைப்பாடல் என்பது பலபேருடைய கூட்டு முயற்சி. திரைப்படப் பாடல் என்பது அந்தப் பாடல் இடம் பெறுகிற சூழலை, அந்தப் பாடலை பாடும் கதாபாத்திரத்தை, அந்த கதாபாத்திரத்தின் உணர்வை கதாபாத்திரத்தின் கருத்தை, அந்த இசையின் மீது கொண்டு வந்து வைத்து சொல்வது. இசைக்காக சில சொற்களை நாம் நீக்க நேரலாம். இசைக்காக சில வடிவங்களை மாற்ற வேண்டிய அவசியம் நேரலாம்.

கதாபாத்திரத்தின் தேவைகருதி என் சொந்தக் கருத்தும் அல்லாத வேறொரு கருத்தை நான் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். திரைப்பாடலில் பல்வேறுபட்டவர்களின் எண்ணப் போக்கிற்கும் இயைந்த ஒரு முயற்சியைத்தான் நான் செய்ய முடியுமே தவிர, கவிதையைப் போல என்னுடைய கருத்தை என்னுடைய ஆளுமை மிக்க சிந்தனைகளை சொல்லிவிட முடியாது. ஆனால் கவிதையைக் காட்டிலும் திரைப்பாடலுக்கு ஒரு மிகப்பெரிய வசதி உண்டு. கவிதை மெல்ல மெல்ல மக்களை சென்று சேரும். திரைப்படப் பாடல் உடனடியாக உள்ளத்திலே போய் பதியும். அது வழங்குகின்ற வரிகள் 'வாளை மீனுக்கும் விலங்கு மீனுக்கும் கல்யாணம்' என்பதாகக்கூட இருக்கலாம். 'தேராட்டம் காரினிலே ரொம்ப திமிரோடு போறவரே எங்கள் ஏரோட்டம் நின்று போனால் உங்கள் காரோட்டம் என்ன ஆகும்?' என்று கேட்கிற வரிகளாகக்கூட இருக்கலாம். 'ஏரோட்டம் நின்று போனால் உங்கள் காரோட்டம் என்னவாகும்?' என்று ஒவ்வொரு கிராமத்துக்காரனையும் பாடவைக்கிறதே அது கவிதையை விட சட்டென்று தீப்பற்றி கொள்கிற உணர்ச்சியை உண்டாக்குகிறது.

'வேலைக்காரன்'திரைப்படத்தில் இடம் பெறுகின்ற 'தாஜ்மஹாலின் காதிலே இராம காதை கூறலாம், மாறும் இந்த பூமியில் மதங்கள் ஒன்று சேரலாம்'என்ற பாடல் வரியை நான் கவிதையிலே எழுதி இருந்தால் அது 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, லட்சக்கணக்கான மக்களைத் தான் சென்றடைந்திருக்கும். ஆனால் கோடிக் கணக்கான தமிழர்கள், உலகத்திலே வாழுகிற அத்தனை திசைகளிலும் இருக்கிற தமிழர்களைப் போய் இந்த சிந்தனைகளை சட்டென்று விதைக்கிற ஆற்றல் இந்த திரைப்பாடலுக்கு உண்டு.

திரைப்படப் பாடலை தகுந்த விதத்தில் பயன்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சமூகத்திற்கு மிகுந்த பயன் கிடைக்கும் என்பது என்னுடைய கருத்து.

கேள்வி : திரைப்படக் கவிஞர்களில் சந்தங்கள் இயல்பாக வந்து விழுகின்ற பாடலாசிரியராக நீங்கள் இருக்கிறீர்கள்? ஆனாலும் சில குறிப்பிட்ட இசையமைப்பாளர்களுக்குத் தான் நீங்கள் பாடல்கள் எழுதுகிறீர்கள். அதிலும் பெரும்பாலும் இளையராஜாவுக்கு. என்ன காரணம்?

இளையராஜாவைத் தவிர வேறு யாருடைய இசையிலும் எழுதுவதாக இப்பொழுது உங்களுக்குத் தெரியவில்லை. நான் முதன் முதலில் எழுதத் தொடங்கியது சங்கர்-கணேஷ் அவர்களின் இசையில் தான். எம்.எஸ்.விஸ்வநாதன், கங்கை அமரன், சந்திரபோஸ், எஸ்.ஏ.ராஜ்குமார், அண்மையில் பரத்வாஜ் இசையில் கூட எழுதியிருக்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய இசையமைப்பாளர்களின் இசையில் எழுதவில்லை என்பது உண்மைதான். இளையராஜா அவர்களின் இசையில் நான் நிறைய எழுதியிருக்கிறேன் என்பதும் உண்மைதான்.

அதற்குக் காரணம் இன்றைக்குத் திரைப் பாடல்களுடைய சூழல்கள் மாறி இருக்கின்றன. பாடலாசிரியனுக்கும் ஒரு பொறுப்பு உண்டு என்பது என்னைப் போன்றவர்களுடைய கருத்து. அந்த பொறுப்பை நிறைவேற்ற முடியாதபோது பாடல் எழுதுவதைவிட சும்மா இருப்பது சுகம் என்று கருதுகிறவன் நான். எல்லாவற்றோடும் சமரசம் செய்து கொள்ள முடியாது. இறங்கி வருவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் கீழே விழுவதற்கு நாங்கள் தயாராக இல்லை. கீழே விழுவதுதான் ஆகாயத்தில் மிதப்பது என்று கருதுகிற உலகத்தில் எங்களுக்கு சம்பந்தமில்லை. நாங்கள் சுடுகாட்டில் கூவுகிற குயில்களல்ல. எங்களுடைய வனாந்தரம் வேறு. இந்தச் சுடுகாட்டிலும் எங்களுக்கு வேலை இருக்கிற போது இந்தச் சுடுகாட்டை நந்தவனமாக்கும் முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுகிறோம். வாய்ப்புக் கிடைக்கிறபோது எங்களுடைய வனாந்தரங்களில் எங்களுடைய சிறகுகளை விரிக்கிறோம்.

திரைப்படம் என்பது பலவிதமான சமரசங்களுக் கான இடம். அதில் என்னைப் போன்ற சுயசிந்தனை உடையவர்கள் இவ்வளவு காலம் தாக்குப்பிடித்தது என்பதே பெரிய விஷயம். கவிஞன் என்கின்ற மிகப்பெரிய வீச்சோடு திரைப்படத் துறையில் நான் நுழைந்ததனால் இவ்வளவு காலம் அதிலே தாக்குப் பிடித்திருக்கிறேன். நான் திரைப்பட பாடலாசிரியனாக மாறி, அதன்பிறகு நான் கவிஞனாக வந்திருந்தால் இது நடந்தே இருக்காது. திரைப்பட உலகில் புகழ்பெற்ற பிறகு கவிஞனாக புகழ்பெற்ற பலர் இருக்கிறார்கள். கண்ணதாசன் கூட திரைப்படத்தில் எழுதி இருக்கவில்லை என்றால் அவரது அற்புதமான படைப்பாற்றல் வெளிப்பட்டிருக்குமா என்பது சந்தேகம்தான். எனக்கு ஏற்ற இடங்களில் நான் புரிந்தேன். திரைப்படத் துறைக்கு நான் ஏற்றவனல்ல. எனக்கு திரைப்படத்துறை ஏற்றது.

இரண்டையும் புரிந்து கொள்கிற இடங்களில் மட்டும்தான் என்னால் இருக்க முடியும். எப்போதும் திரைப்படத்திற்கு எழுதிக் கொண்டிருப்பது அப்படி ஒன்றும் உயர்ந்த நிலையல்ல என்பது என்னுடைய கருத்து. எந்த இசையமைப்பாளர் களிடத்திலும், எந்தக் காலத்திலும், எல்லாரோடும் சமரசமாக உட்கார்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் சரியானவர்கள் அல்ல என்றுதான் நாம் முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது. நான் சரியானவன். சரியான இடங்களில் சரியான சமயங்களில் இருப்பேன்.

கேள்வி : சமகால திரைப்பாடல் பற்றி உங்களுக்கு எதிர்மறையான கண்ணோட்டம் இருப்பது போல் தெரிகிறதே?

இல்லை. பாடலைப் பற்றிய கண்ணோட்டம் மட்டுமல்ல. சூழல்கள் பற்றிய கண்ணோட்டத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்.



கேள்வி : இந்த இடத்தில் அப்துல் ரகுமானின் 'அம்மி கொத்தும் இடத்தில் சிற்பிக்கு என்ன வேலை'என்ற கருத்து வலுப்படுகிறதே?

அப்துல் ரகுமானுக்கும் எனக்கும் என்ன வேறுபாடு என்று சொன்னால், களத்துக்கு உள்ளேபோய் இந்தக் களத்தை என் கைக்குள் கொண்டுவர முடியுமா? என்று முயற்சி செய்ய வேண்டியது ஒரு வீரனுடைய வேலை. 'இல்லை, இது எனக்கு ஏற்ற களமல்ல' என்று ஒதுக்கித் தள்ளுவது ஒரு வீரனுடைய வேலையாகாது. அப்துல் ரகுமானைப் பொறுத்தவரைக்கும் திரைப்படத்துறை தனக்கு ஒத்துவராது என்று அவர் சொல்கிறார். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால் திரைப்படத்துறையில் இருப்பவர்களைப் பார்த்து குறையாகப் பேசுவது என்பது ஒத்துக் கொள்ள முடியாது.

'சிற்பிக்கு எதற்கு அம்மி கொத்தும் வேலை?' என்று கேட்பது ஒரு நல்ல கேள்வி போல் உங்களுக்குத் தோன்றக்கூடும். நான் அப்போதே அதற்கு பதில் சொன்னேன். சிற்பி அம்மி கொத்த வேண்டுமென்ற அவசியமில்லைதான். என்னுடைய கேள்வி ஒரு சிற்பி அம்மி கொத்த முடியுமா? முடியாதா? என்னிடத்திலே ஒரு பணி கொடுக்கப்படுகிறது. ஒரு இசை கொடுக்கப் படுகிறது. டியூனுக்கு எழுதுறோம். அவ்வளவுதான்.

அப்துல் ரகுமான் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அதுவேறு. அதற்காக அவர் சொல்கிற கருத்தை எல்லாம் அங்கீகரிப்பது அவருக்கும் நல்லதல்ல. எனக்கும் நல்லதல்ல. அந்த விஷயத்தில் அவர் சொன்னது தவறு. அது ஒரு சவால். நான் ஒரு 500 பாடல்கள் எழுதியிருக்கேன். 'ராஜராஜ சோழன் நான். எனை ஆளும் காதல் தேசம் நீதான்' இதில் புதுக்கவிதையும் வருது, சந்தமும் வருது, சினிமாவுக்கேற்ற தன்மையும் இருக்கிறது

'நட்சத்திர ஜன்னலில் வானம் எட்டிப் பார்க்குது, சிறகை விரித்துப் பறப்போம், நம் உறவில் உலகை அளப்போம்' என்று சினிமாவில் தானே நான் எழுதி இருக்கிறேன். நம்முடைய உறவின் மேன்மைகளை அன்பின் பெருமைகளைப் பார்த்து அதிசயப்பட்டு வானம் தன்னுடைய ஜன்னலை எல்லாம் திறந்துவிட்டு நம்மை எட்டிப் பார்க்கட்டும் என்கிற கற்பனை புதுசு.

'நட்சத்திர ஜன்னல்' என்று பல்லவியை எழுதுகிற போது, 'இதைப் பாடமுடியுமா? வேறு பல்லவியைத் தாருங்கள்' என்று கேட்டார்கள். நான் சொன்னேன், 'இந்தப் பாட்டிலே இது ஒன்னுதான் புதுசு. இதை மாற்ற வேண்டாம்' என்று டைரக்டர் விக்ரமன் அவர்களுடனும், எஸ்.ஏ.ராஜ்குமார் அவர்களுடனும் வாதிட்டு இந்தப் பல்லவியை நான் தக்கவைத்துக் கொண்டேன். சினிமாவிலும் எழுத முடியும். அதனால் சினிமாவை குறை கூற வேண்டிய அவசியமில்லை.

கேள்வி : 80களில் ஈழப் பிரச்சனை தீவிரமடைந்த போது உங்கள் கவிதைகளிலும் அந்தப் பதிவுகள் வலுவாக இடம் பெற்றன. குறிப்பாக மைய அரசின் நிலையை கடுமையாக விமர்சித்தீர்கள். இப்பொழுது மீண்டும் ஈழம் தீவிரமடைந் திருக்கிறது. என்ன சொல்கிறீர்கள்?

80களில் ஈழப்பிரச்சனை தீவிரமடைந்த போது, அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்களின் செயல் பாட்டை மிகுந்த கோபத்தோடு விமர்சனம் செய்தேன். 'அமிதாப் பச்சனுக்கு அடிபட்டு விட்டதென்றால் அலறிக் கொண்டு ஓடுகின்றார். இலங்கையிலே பட்டப்பகலில் நட்ட நடுத்தெருவில், வெட்டொன்று துண்டிரண்டாய் விழுந்து கொட்டு கொட்டென்று கொட்டும் குருதியிலே தமிழ் கடந்து கோசங்கள் போடுவதும் வஞ்சமறியாத பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சினை பெய்த அம்பு நீண்டு கிழிப்பதையும் பார்த்த பின்பும் கேட்ட பின்பும் ஓர் அதட்டல் போடக்கூட உனக்கு அவகாசம் இல்லை யென்றால் சரியாடி பராசக்தி' என்று கேட்டேன். இந்திரா காந்தியையே அப்படி கேட்டிருக்கிறேன். இன்றைக்கு இருக்கிறவர்களை கேட்பதற்கு என்ன வார்த்தை இருக்கிறது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்திராகாந்தி அவர்கள் மட்டும் இன்னும் கொஞ்ச காலம் இருந்திருப்பார்களே ஆனால் பிற்காலத்திலே அவர்களுடைய அணுகு முறையிலே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். ஈழத் தமிழர்களின் பிரச்சனைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைத்திருக்கும்.

இன்றிருக்கிற மத்திய அரசைப் பற்றிய என்னுடைய கவலையெல்லாம் இவர்கள் யாரும் ஈழத் தமிழர்களை கைதூக்கி விடவேண்டிய அவசியமில்லை. அவர்களோடு கைகுலுக்க வேண்டிய அவசியமும் கூட இல்லை. எதிரிகளின் கையில் ஆயுதங்களைக் கொடுக்காமல் இருந்தால் அதுவே எங்கள் தமிழ் ஈழத்திற்கு செய்கிற பெரிய உதவி.

கேள்வி : சமகால கவிதையின் போக்குகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இன்றைய நவீன கவிதை என்பதும் நவீன எழுத்து என்பதும் தமிழ்ச் சமூகத்தினுடைய மனசாட்சியின் மீது தொடுக்கப்பட்ட போர் என்று நான் கருதுகிறேன். அறிவு ஜீவிகள் என்று சொல்கிற சிலபேருடைய அடாவடித்தனம் தமிழ் இலக்கிய உலகத்திலே இப்பொழுது நிகழ்ந்து வருகிறது. இன்றைய நவீன கவிதை 'எழுத்து' காலகட்ட 'கசடதபற' கால கட்ட கவிதையைப் போல போய்விட்டதோ என்று தோன்றுகிற விதத்திலே கவிதையின் வடிவ வெளிப்பாடுகள், உத்தி முறைகள், உணர்வுகளின் வெளிப்பாடுகள் இருப்பதை பார்த்திருப்பீர்கள். பெரும்பாலும் மனித சமூகத்தின் மேன்மையை நோக்கி நடக்க வேண்டிய கலையை மனங்களினுடைய சூழ்நிலையை நோக்கி தள்ளிக்கொண்டு போகிறார்களோ என்று நான் கவலையோடு இந்தச் சூழலை கவனித்துக் கொண்டுள்ளேன். ஆனாலும் நம்பிக்கையுள்ள இளங்கவிஞர்கள், சமூகத்தின் மனச்சாட்சியாக இருக்கக் கூடிய கவிஞர்கள் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

சமூக அக்கறையுள்ள கவிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு சிறிய வட்டம் அந்த வட்டத்திற்குள் பேசுகிற விசயத்தையே பெரிதுபடுத்திப் பேசி, பதிவு பண்ணி, இவர்களின் படைப்புகள் தான் கவிதை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நவீன படைப்பாளிகள் தமிழ் பாரம்பரிய மரபுகளைக் கேலி செய்கிறார்கள். தமிழர்களுக்கு என்று இருக்கின்ற உணர்வுகளுடைய முன்னோட்டத்தைப் புறக்கணிக்கிறார்கள். தமிழை விட்டு தமிழர்களை நகர்த்தப் பார்க்கிறார்கள். இதை எதிர்த்து நம்முடைய போர் தொடர வேண்டிய கால கட்டம் இது.

கேள்வி : சமகால கவிதைகளில் பெண்மொழி, தலித் மொழி என்றெல்லாம் சொல்வது பற்றி உங்கள் கருத்து என்ன?

கவிதை ஒரு மொழி. கவிதையில் பெண்மொழி, கவிதையில் தலித் மொழி என்றெல்லாம் பகுத்துப் பார்ப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. திருவள்ளுவன் சொன்னதை தலித்தின் குரல் என்று சொல்வீர்களா? 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்; பரந்து கெடுக உலகு இயற்றியான்'ஒருவன் பிச்சை எடுத்துக் கூட வாழ வேண்டும் என்ற நிலை இந்த சமூகத்தில் இருக்குமானால் இந்த சமூகத்தினுடைய படைப்பாக்கங்களை அழித்து ஒழிக்க வேண்டும் என்கிற அந்த ஆவேசக் குரல்; அவன் ஒரு 'கம்யூனிஷ்டா'. எந்த விதத்திலே அவனை பிரிப்பீர்கள். பெண்களுக்காக ஆண்களே நிறையப் பேசி இருக்கிறார்கள். ஆண்களுடைய மொழியும் பெண்மொழிதான். பெண்களுக்காக மொழியப்பட்ட மொழியெல்லாம் பெண்மொழிதான்.

அதே மாதிரி தலித்துகளுக்காக தலித்துகளே எழுத வேண்டும் என்கிற அவசியமில்லை. தலித்துகளுக்காக மற்றவர்கள் எழுதி இருக்கிறார்கள். பாரதி எழுதலையா தலித்துகளுக்காக? 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே வெள்ளை பரங்கியை துரையென்ற காலமும் போச்சே', 'ஈனப் பறையர்களேனும் அவர் எம்முடன் வாழ்ந்திங்கு இருப்பவரன்றோ' 'உங்களால் ஈனப்பறையரென்று சொல்லப்படுபவர் அவர் எம்மோடு வாழ்ந்திங்கு இருப்பவர்'. 'சீனத்தவராய் விடுவாரோ' என்று கேட்கவில்லையா? அவன். தலித் பாரதி என்று சொல்லிக் கொண்டா அவன் எழுதினான். இதற்கெல்லாம் அப்பப்ப ஒரு புது போஸ்டர்கள் அடிக்க வேண்டியதிருக்கிறது. புதிய கொடிகளை காட்ட வேண்டி இருக்கிறது. அப்ப தலித் பாரதி என்று சொல்லிக் கொண்டா அவன் எழுதினான். தகழி சிவசங்கரன் பிள்ளையினுடைய எழுத்தில் தலித்தியம் இல்லையா? வேறுபடுத்தி வகைப்படுத்தி பார்ப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இலக்கியவாழ்க்கை

மு.மேத்தா மதுரை தியாகராசர் கல்லூரியில் பயில்கையிலேயே இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தார். 1971-ல் அவர் கோவை அரசுக் கலைக்கல்லூரிக்கு பணிமாற்றம் பெற்று வந்தார். புவியரசு, சிற்பி, பாலா, தமிழ்நாடன், முல்லை ஆதவன், ஞானி, ஜனசுந்தரம், அக்னிபுத்திரன் ஆகியோருடன் அறிமுகம் ஏற்பட்டது. வானம்பாடி கவிதை இயக்கம் உருவானபோது அதில் பங்கெடுத்தார். வானம்பாடி இதழில் கவிதைகள் எழுதினார்.

மேத்தா மரபை நிராகரிக்காத புதுமை தேவை என கருதியவர். 'மரபுக்கும் புதுமைக்கும் நான் பாலமாக இருப்பேன்' என்று முதன் முதலாக நடந்த வானம்பாடிகள் கூட்டத்தில் கூறினார். 'இந்தப் பூமி உருண்டையை புரட்டி விடக்கூடிய நெம்புகோல் கவிதையை உங்களில் யார் பாடப் போகிறீர்கள்' என்ற கேள்வியை வானம்பாடிகளை நோக்கி முன்வைக்கிற கவிதை எழுதினார். அது வானம்பாடி முதல் இதழிலே வெளிவந்தது. வானம்பாடி இயக்கத்தின் முத்திரை வரிகளில் ஒன்று அது.

மு.மேத்தா எழுதிய 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்ற கவிதை புகழ்பெற்றது. தொடர்ந்து 'கண்ணீர்ப்பூக்கள்', என்னும் தொகுதி வெளிவந்து அவர் அன்று தமிழில் எழுதிய புகழ்பெற்ற கவிஞர்களில் ஒருவராக ஆனார்.

1975-ல் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. மு.மேத்தா இந்திராகாந்தியை புகழ்ந்து 'இந்தியா இந்திரா 75' என்னும் தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டார். வானம்பாடிகளில் சிற்பி போன்றவர்கள் அவசரநிலை கெடுபிடிகளால் ஒதுங்கிக்கொண்டனர். ஆகவே வானம்பாடி இயக்கம் பிளவுபட்டு இதழ் நின்றது.

மு.மேத்தா அதன்பின்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர் ஆனார். 'கலைஞருக்கும் தமிழ் என்று பேர்' என்ற பெயரில் 2010-ல் ஒரு கவிதை தொகுதி வெளியிட்டார். 1981-ல் திரைப்படப் பாடலாசிரியராக அறிமுகமானார். தொடர்ந்து திரைத்துறையிலேயே பாடலாசிரியராகப் பணியாற்றினார்.

நாயகம் ஒரு காவியம்

மு.மேத்தா தன் பெரும்படைப்பாக எழுத எண்ணியது 'நாயகம் ஒரு காவியம்'. கண்ணதாசனின் ஏசு காவியத்தை முன்னுதாரணமாகக்கொண்டு புதுக்கவிதையில் எழுத தொடங்கிய அந்நூல் பதுருப் போருடன் நின்றுவிட்டது. அதன் பிறகான நபி வரலாற்றை எழுதும் உடல்நிலை அவருக்கு அமையவில்லை என ஒரு பேட்டியில் சொல்கிறார். 2013-ல் ரஹ்மத் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இலக்கிய இடம்

மு.மேத்தாவின் கவிதைகள் எழுபதுகளில் ஓங்கி ஒலித்த மூன்று பொதுவெளிக் கோஷங்களின் மொழிப்பதிவுகள். எழுபதுகளில் இந்தியப் பொருளியல் சோர்வுநிலையில் இருந்தது. வேலையில்லாத இளைஞர்கள் பெருகியிருந்தனர். அரசியலில் மாற்றத்திற்கு வழியே இல்லை என்னும் இறுக்கநிலை நிலவியது. அதற்கு எதிராக இந்தியாவெங்கும் இளைஞர் நடுவே சீற்றம் உருவானது. ஜெயப்பிரகாஷ் நாராரயணன் உருவாக்கிய மாணவர்

கிளர்ச்சி, வங்கத்தில் உருவாகி இந்தியாவெங்கும் பரவிய நக்ஸலைட் கிளர்ச்சி (இடதுசாரி தீவிரவாத குழுவினர்) ஆகியவை அந்த சீற்றத்தின் வெளிப்பாடுகள். மு.மேத்தாவின் கவிதைகளில் அந்தச் சீற்றம் புனைந்துரைக்கப்பட்ட வரிகளாக வெளிப்படுகிறது. அக்காலகட்டத்தில்தான் படித்த இளைஞர்கள் தங்கள் இல்லற வாழ்க்கையை தாங்களே தேர்வுசெய்யும் உணர்வுநிலையை பொதுவாக அடைந்தனர். காதல் என்பது அன்றைய இளைஞர்களின் உணர்ச்சிகரமான பேசுபொருள். அவ்வுணர்வுகளை மு.மேத்தா வெளிப்படுத்துகிறார். அத்துடன் அன்று பெண்களுக்கு எதிரான கட்டுப்பாடுகள், வரதட்சிணை போன்ற சமூகமுறைகளுக்கு எதிராக சீற்றம் எழுந்தது. அவையும் அவர் கவிதைகளில் உள்ளன. அவை அன்றைய உணர்வுகளை வெளிப்படுத்தியமையால் இளைஞர்களால் விரும்பப்பட்டன. ஆனால் மு.மேத்தாவின் கவிதைகள் வெளிப்படையானவை, ஆர்ப்பாட்டமான சொல்லாட்சி கொண்டவை. நவீனக்கவிதைக்குரிய நுண்ணிய வெளிப்பாடோ, மறைபிரதித் தன்மையோ, சொல்லடக்கமோ இல்லாதவை என இலக்கியவிமர்சகர்கள் நிராகரித்தனர். மு.மேத்தா வானம்பாடி மரபின் முதன்மைப்புகழ் கொண்ட கவிஞராக மதிப்பிடப்படுகிறார்.

நூல்கள்

கவிதை

- கண்ணீர்பூக்கள் (1974)
- ஊர்வலம் (1977)
- மனச்சிறகு (1978)
- அவர்கள்வருகிறார்கள் (1980)
- முகத்துக்கு முகம் (1981)
- நடந்தநாடகங்கள் (1982)
- காத்திருந்த காற்று (1982)
- ஒரு வானம் இரு சிறகு (1983)
- திருவிழாவில் தெருப்பாடகன் (1984)
- நந்தவனநாட்கள் (1985)
- இதயத்தில் நாற்காலி (1985)
- என்னுடையபோதிமரங்கள் (1987)
- கனவுக்குதிரைகள் (1992)
- கம்பன் கவியரங்கில் (1993)

- என் பிள்ளைத் தமிழ் (1994)
- ஒற்றைத் தீக்குச்சி (1997)
- மனிதனைத்தேடி (1998)
- ஆகாயத்துக்கு அடுத்த வீடு (2004)
- மு.மேத்தா கவிதைகள் (2007)
- கலைஞருக்கும் தமிழ் என்று பேர் (2010)
- கனவுகளின்கையெழுத்து (2016)
- நாயகம் ஒரு காவியம்

கட்டுரை

- திறந்த புத்தகம்

நாவல்கள்

- சோழ நிலா
- மகுடநிலா

சிறுகதை

- கிழித்த கோடு
- மு.மேத்தா சிறுகதைகள்
- பக்கம் பார்த்து பேசுகிறேன் (2008)

கவிஞர் மு.மேத்தாவின் காதல் கவிதைகள்

சேகர் ராஜதுரை

https://thoooralkal.blogspot.com/2011/11/blog-post_2155.html

அவளைக்
கண்டவுடன்
என் கையில் கட்டியுள்ள
கடிகாரம் கூட
நின்று விடுகிறது
அதற்கும் சேர்த்துத்தான்
அடித்துக் கொள்கிறதே
இதயத்தினுள் அலாரம்
****

கத்தி மாதிரிக்
கண்கள் - என்றேன்
என் இதயத்தின் மீதுதான்
தீட்டி பார்க்கப் போகிறாய்
என்பதைத்
தெரிந்து கொள்ளாமல்

****

எனக்குத் தெரியும்
நீ விரும்புவது என்னையல்ல
என் கவிதைகளைத்தான்
என்று
ஆனால்
உனக்குத் தெரியுமா
உன்னை விரும்புவது
என் கவிதைகளல்ல
நான்தான்
என்று?
****

படிப்பதற்கு
உனக்குப்
பயன்படும் உன்னுடைய
கண்களைத்தான்
உன்னை நான்
படிப்பதற்கும்
பயன்படுத்துகிறேன்
****

வேறு யாரோ
ஒருவனுடன்
நிச்சயதாம்பூலம்
நிகழ்த்திக் கொண்டிருக்கிற
உன் பெற்றோர்
உணர்ந்து கொள்ளட்டும்
நான்
தேவதாஸ் அல்ல
பிருதிவிராஜன்
****

வீணையைக்
கையிலேந்தி
நின்றிருந்தாய்.....
மெல்ல நெருங்கி
'மீட்டட்டுமா?..'
என்றேன்
சரியெனத்
தலையசைத்துச்
சம்மதித்தாய்.
உனக்குத் தெரியும்
வீணை வாசிக்க
எனக்குத்
தெரியாது
என்பது.

****

கவிஞர் மு.மேத்தா புத்தகங்கள்

https://www.udumalai.com/mu-metha-books.htm



https://www.noolulagam.com/s/?stext=Mu.Metha&si=0

மு.மேத்தாவுக்கு சாகித்ய அகாடமி விருது

https://tamil.oneindia.com/news/2006/12/22/metha.html

டெல்லி:தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் மு.மேத்தா உள்பட 23 பேருக்கு இந்த ஆண்டுக்கானசாகித்ய அகாடமி விருது வழங்கப்படுகிறது.

தேசிய அளவில் சிறந்த இலக்கிய படைப்புகளுக்காக சாகித்ய அகடமி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழில்ஆகாயத்தில் அடுத்த வீடு என்ற மேத்தாவின் கவிதைப் படைப்புக்காக இந்த விருதுகிடைத்துள்ளது. டெல்லியில் பிப்ரவரி 20ம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியில்மேத்தாவுக்கு ரூ. 50,000 ரொக்கப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். எண்ணற்ற கவிதைகளைப் படைத்துள்ள முகம்மது மேத்தா, 1970களில் புதுக்கவிதைகளுக்கு வடிவம் கொடுத்தவர். நவீன கவிதைகளை பிரபலப்படுத்தியவர்களின்முக்கியமானவர்.

காணொளிகள்

01] **Mu. Metha**
https://credits.muso.ai/profile/8157fbfc-a9b4-4ba3-a4c8-726bb9d6dc61
Artist, Songwriter, Musician, Popularity

02] Mu Mehta
https://www.youtube.com/playlist?list=PLZvnATuTZDQPyw28pkhMweRlotuRhRtWJ
19 Videos

03] Kavignar Mu Mehtha Super Hit Collection Audio Jukebox
https://www.youtube.com/watch?v=CHbd9N295Jk [55:29]

04] **இசைக்கு ஏற்ற அழகிய பாடல்கள் பல தந்த மு.மேத்தாவின் பாடல்கள்**
https://www.youtube.com/watch?v=pEWrqrwjswc [1:38:20]

05] **நான் வாழ்க்கையில் செய்த பெரிய தவறு** - Lyricist Mu.Metha Opens Up on Ilaiyaraaja and Tamil Films
https://www.youtube.com/watch?v=CGeYVnkyJo0 [31:18]

06] **தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்" - கவிஞர் மேத்தா தலைமையில் கவியரங்கம்**
https://www.youtube.com/watch?v=ovUJwo2Y2kY [56:38]

07] **மு. மேத்தா பாடல்கள்|இளையராஜா பாடல்கள்**
https://www.youtube.com/watch?v=tBS2S203Now [1:40:10]

08] **Ilayaraaja-க்கு Song எழுதுறது ரொம்ப கஷ்டம் |கவிஞர் மு.மேத்தா**
https://www.youtube.com/watch?v=sHVyO21l5-c [26:59]

09] **மு.மேத்தா உரை | ஆரூர் புதியவன் - சொற்களால் ஒரு சுந்தந்திரப்போர்**
https://www.youtube.com/watch?v=ZiJaQTIIhEo [17:36]

10] 'இளையராஜா இங்கே பொறந்ததுதான் தப்பு' - கவிஞர் மு.மேத்தா வருத்தம்
https://www.youtube.com/watch?v=9XwSjaJsSG4 [14:38]

Tamilnation.org

https://tamilnation.org/literature/modernwriters/mumehta

மு. மேத்தா

in the Ananda Vikatan 22 September 2002

கவிதை, திரைப்பாடல் என்ற இரண்டு தண்டவாளங்களிலும் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இளைப்பாறாமல் ஓடிக்கொண்டிருக்கிற இலக்கிய ரயில் மு. மேத்தா!

தேகமழை நானாகும்
தேதியைத் தேடுவேன்
ஈரவயல் நீயாக
மேனியை மூடுவேன்.

என்று உருகி உருகி நெகிழ்கிற இந்தக் கவிஞர், ஒரு கல்லூரிப் பேராசிரியர்.

"சிறு வயதில் சினிமா பெரிய கனவு. வீட்டில் அழுது அடம்பிடித்து எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்களைக் கொட்டக் கொட்டக் கண்விழித்துப் பார்த்திருக்கிறேன். பிற்பாடு தீவிர இலக்கியத்தில் நுழைந்து கவிதையில் புகழ்பெற்ற பிறகு, சினிமா ஆசை போய்விட்டது. ஆனால், சினிமாவில் பாட்டு எழுதுபவர்கள்தான் இன்று கவிஞர்கள் என்று அறியப்படுகிற சூழ்நிலையில், நண்பர்கள் என்னை சினிமாவை நோக்கி விரட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் ஒரு பாடல் வாய்ப்பு என் வீடு தேடிவந்தது" என்று சிரித்தபடி பழைய நினைவுகளில் மூழ்குகிறார்.

"அப்போ நாடக உலகில் பிரபலமாயிருந்த உடையப்பா என்பவர் 'அனிச்சமலர்' என்`றாரு படம் தயாரித்தார். அவருடைய

மகன் சுப்பிரமணியம் என் கல்லூரி நண்பர். என் கவிதைகளைப் படித்திருந்த உடையப்பா, அவரது படத்தில் நான் ஒரு பாடல் எழுத வேண்டுமென்று விரும்பி, என்னை சங்கர்-கணேஷிடம்

அறிமுகப்படுத்தினார். சுற்றிலும் சினிமாக்காரர்கள். முற்றிலும் அறிமுக மாகாத சூழ்நிலை. பாடல் எழுத சரியான பயிற்சியில்லாத நான் சங்கர்-கணேஷ் தந்த அந்த மெட்டை என் தமிழால் தட்டுத்தடுமாறி தடவிப் பார்த்தேன். அதுதான் -

காத்து வீசுது புது காத்து வீசுது
இங்கே
கதிர்கள்கூட வயல்வரப்பில்
காதல்
பேசுது

என்ற எனது முதல் பாடல். அந்தப் படம் ஓடவில்லை. எனது பாடலும் பிரபலமாகவில்லை.

அதற்குப் பிறகு பாட்டெதுவும் எழுதாமல் விலகியிருந்த என்னைத் திரும்பவும் சினிமாவுக்குள் அழைத்தவர் கமல்ஹாசன்தான். கமலும் பாலகுமாரனும்தான் என்னை மனோபாலாவிடம் அறிமுகப்படுத் தினார்கள். மனோபாலா மூலமாக இளையராஜாவின் நட்பு கிடைத்தது. என் வாழ்க்கையின் திருப்புமுனை அது. ரஜினி நடித்த 'வேலைக்காரன்' படத்தில் ஆறு பாடல்களை எழுதும் வாய்ப்பை எனக்குத் தந்தார் இளைய ராஜா.

பக்கத்து வீட்டுக்காரன் முகம் கூட தெரியாத இந்த நகரத்து மனிதர்களின் அவசர வாழ்க்கையும், மக்களை ஏமாற்றிப் பிழைக்கிற அரசியல் சுயநலமும் என்னை எப்போதும் ரணப்படுத்துகிற விஷயம், அதுதான்...

சிங்காரமா ஊரு... இது
சென்னையின்னு பேரு
ஊரச் சுத்தி ஓடுதையா
கூவம் ஆறு!

கட்சிகளும் வாங்கி இங்கே
கட்டிடங்கள் வெச்சிருக்கு
கஷ்டப்படும் ஏழைக்கெல்லாம்
கட்டாந்தரை தானிருக்கு.

என்று என்னை எழுத வைத்தது. அதே படத்தில் 'வா.. வா.. வா... கண்ணா வா'ன்னு ஒரு காதல் பாடல். மென்மையான அந்தப் பாட்டில் அழுத்தமாக ஒரு விஷயம் சொல்ல ஆசைப்பட்டேன்.

காளிதாசன் காண வேண்டும்
காவியங்கள் சொல்லுவான்
கம்பநாடன் உன்னைக் கண்டால்
சீதை என்று துள்ளுவான்

- இப்படிப் போகிற பாடலின் இறுதியில்,

தாஜ்மகாலின் காதிலே
இராம காதை கூறலாம்
மாறும் இந்தப் பூமியில்
மதங்கள் ஒன்றுசேரலாம்.

என்று மத ஒற்றுமையைச் சொல்கிற மாதிரி எழுதினேன். ஒரு பாடலாசிரியனாக எனக்கிருக்கும் எல்லைக்குள் சமூகம் சார்ந்த விஷயங்களைச் சொல்லவேண்டும் என்ற துடிப்பு எப்போதும் எனக்கிருக்கிறது.

ஆதாம்-ஏவாளின் காதல்தான் இந்த உலகம். என்னுடைய காதல் கவிதைகள் ஏராளமான இதயங்களை எனக்குத் தந்திருக்கின்றன. 'ரெட்டைவால் குருவி' படத்துக்காக பாலுமகேந்திரா அழைத்துப் பேசினார். ஒருவனுக்கு இரண்டு காதலிகள் என்று சூழலை அவர் விவரித்த போதே கிறுகிறுத்து விட்டது. நான் எழுதிக்கொண்டு சென்ற இரண்டு, மூன்று பல்லவிகளில் 'ராஜராஜ சோழன்'தான் கம்பீரமாக இருப்பதாக அதை எடுத்துக் கொண்டார்.

உல்லாச மேடை மேலே
ஓரங்க நாடகம்..
இன்பங்கள் பாடம் சொல்லும்
என் தாயகம்.

கள்ளூரப் பார்க்கும் பார்வை
உள்ளூரப் பாயுமே
துள்ளாமல் துள்ளும் உள்ளம்
சல்லாபமே

வில்லோடு அம்பு ரெண்டு
கொல்லாமல் கொல்லுதே
பெண்பாவை கண்கள் என்று

பொய் சொல்லுதே.

அற்புதமான இசையும் ஜீவனுள்ள வரிகளும் சேர்ந்து இன்றைக்கும் அந்தப் பாடல் என் மனக் குளத்தில் கல்லெறிகிறது.

பாடலாசிரியராக இருப்பதில் இருக்கக்கூடிய சங்கடங்களும் நெருக்கடிகளும் வெளியில் பெரிதாகத் தெரியாது. இயக்குநர் ஸ்ரீதர் அவர்கள் ரொம்பப் பிரபலமாக இருந்த நேரம் அது. அவர் படத்தில் பாடல் எழுத வாய்ப்புக் கிடைப்பதே பெரிய விஷயம். அந்த நேரத்தில் அவரே அழைத்து ஒரு படத்தில் எனக்கு வாய்ப்பு தந்தார். வரிகள் நன்றாக அமைந்து போகவே, மேலும் சில பாடல்களைத் தந்தார். அதில் ஒரு பாடல் ஏற்கெனவே ஒரு கவிஞருக்குச் சென்று அவர் சரியாக எழுதாததால், என்னை எழுதித் தருமாறு கேட்டார்கள். ஆனால், அதை நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன். அது இன்னொரு கவிஞரைக் காயப்படுத்துகிற மாதிரி ஆகிவிடும் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

இந்த மாதிரியான விஷயங்களில் நான் என்றுமே சமரசம் செய்துகொண்டது கிடையாது. இந்த என்னுடைய குணத்தால்தான் அதிகமான பாடல்கள் எழுத முடியவில்லை என்று இன்றைக்கும் என் நண்பர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்கிற மாதிரி 'காசி' படத்தில் வருகிற 'என் மன வானில் சிறகு விரிக்கும்' பாடலில் எழுதினேன் –

நான் பாடும் பாடல்
எல்லாம்
நான் பட்ட பாடே
அன்றோ
பூமியில் இதை யாரும்
உணர்வாரோ
மனதிலே
மாளிகைவாசம்
கிடைத்ததோ மரநிழல்
நேசம்
எதற்கும் நான்
கலங்கியதில்லை
இங்கே.

இந்தத் திரையுலக வாழ்க்கையில் எனக்கு நான் உண்மையாக இருந்திருக்கிறேன். அது போதும் எனக்கு.

பாடல்களைப் பொறுத்த வரைக்கும் எங்கேயோ, எப்போதோ நாம்

கேட்டு ரொம்பவும் பாதித்த ஒரு வார்த்தையோ, விஷயமோ நம்மையும் அறியாமல் பாட்டுக்குள்ளே வந்து விழுந்துவிடும். 'சூர்யவம்சம்' படத்தில் வருகிற 'நட்சத்திர ஜன்னலில்' பாடலின் சரணத்தில் இப்படி எழுதியிருப்பேன் -

சித்திரங்களை பேசச்
சொல்லலாம்
தென்றலை அ□சல்
ஒன்று போடச்
சொல்லலாம்
புத்தகங்களில்
முத்தெடுக்கலாம்
பொன்னாடை
இமயத்திற்கும்
போர்த்திவிடலாம்.

ரெக்கார்டிங் நடந்து கொண்டிருக்கும்போதே இயக்குநர் விக்ரமன் என்னைக் கட்டிப் பிடித்துப் 'பிரமாதம்' என்று பாராட்டினார். 'அப்படின்னா நீங்க கலைஞரைத்தான் பாராட்டணும்!' என்று சொன்னேன். திருக்குறளுக்கு உரை எழுதும்போது 'திருக்குறளுக்கு நான் விளக்கவுரை எழுதமுடியாது. இமயமலைக்குப் பொன்னாடை போர்த்த முடியுமா?' என்று கலைஞர் எழுதியிருந்தார். ஒருவர் வார்த்தைகளின் மேல் உள்ள அதிகப்படியான பிரியத்தால் இப்படி நேர்ந்துவிடுவது உண்டு. சரியான இடத்தில் கையாண்டிருப்பதாக கலைஞரே அதைப் பாராட்டினார்.

'பாரதி' படத்தில் எழுதிய 'மயில் போல பொண்ணு ஒண்ணு' பாடல் என்னை மிகவும் திருப்திப்படுத்திய பாடல். பவதாரிணிக்கு தேசியவிருதைப் பெற்றுத்தந்தது அந்தப் பாடல் என்பதில் எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. இந்தப் பாடலில் வருகிற -

தங்க முகம் பார்க்க அந்த சூரியனும் வரலாம்
சங்கு கழுத்துக்கே பிறை சந்திரனை தரலாம்...
என்ற வரிகள் கவிதையாக இருப்பதாக இலக்கிய நண்பர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில், பாடலின் சூழ்நிலைக்கேற்ப இறங்கிவந்து,

பர்மா பஜார்.. சைனா பஜார்
பளபளக்குது பாண்டி பஜார்
பையன் போட நிஜாரில்லையே
குடியரசு ஆட்சி கண்டு
வருஷம் ரெண்டு பெப்பர்மெண்டு

வழங்குவதில் நியாயமில்லையே...

என்று சமூகத்துக்கு ஏதேனும் செய்தி தர விரும்புகிறேன். 'காஷ்மீர்' படத்துக்காக சமீபத்தில் எழுதிய பாடலின் பல்லவி இது -

மலைகளில் அருவி பாடும் பாடல்
மேகங்கள் எழுதியதோ
மனிதர்கள் பூமியில் பாடும் பாடல்
தாகங்கள் எழுதியதோ?

மனிதனுடைய தேடல்தான் இசை, கவிதை எல்லாமே. என்னுடைய தேடல்கள்தான் பாடல்களாகி இருக்கின்றன. நான் எப்போதும் தேடுபவனாகவே இருப்பேன்."

சந்திப்பு: ராஜு முருகன்
படம்: என். விவேக்

மு. மேத்தா கவிதைகளில் பெண்ணியம்

Feminism in the Poems of Mu. Metha

https://doaj.org/article/3d52602559194fe5b484aba8c8dbc40d

கு. ஜெலின் சுஜி / **K. Jelin Suji,**
முனைவர் த. மகிலா ஜெனி / **Dr. D. Mahila Jeni**

Abstract

READ ONLINE

In this article, the researcher describes the concepts of feminism found in the poems of Mu. Metha. Women are to be admired and respected but the world of men discourages women in all aspects and suppresses them for their aims and goals. Women should be protected as the eyes of the country. Women are worshipped as goddesses in India. in Tamil society, women were given high status and respected for their wit but after the implementation of patriarchy, women were treated as slaves. To empower society, Women should live in good relations at home and in the country. As a beloved, a good wife to the husband, the pinnacle of motherhood, a mother-in-law,

and she evolves many roles and relationships in Tamil families. In reality, women are subordinate to men in family responsibilities and workplaces. Hence, feminist thought originated to change this situation for women. Many male writers became the champion of women's rights and in that line Mu. Metha is a pioneer in Tamil poetic order. His poems deal with feminist themes so this article describes the problems faced by women who strive to forge new paths in the poems of Mu. Metha.

தமிழ் - இஸ்லாமிய கவிதைகள் & இலக்கியங்கள்

மு.மேத்தா கவிதைகள்

http://www.mailofislam.com/m_mehta_kavithaigal

நாயகம் ஒரு காவியம்

இறைவனிடம் ஒரு விவாதம்

ஏழைதான் நான்
இருந்தாலும் இறைவா உன்
செல்வ மாளிகையில்
சிறுபூவாய் மலரேனோ?

குளிக்கத் தெரியாத
குழந்தையொன்று தன் தாயைக்
குளிப்பாட்டி அழகு செய்யக்
குதித்துவரின் குற்றமுண்டோ?

தூயவனை என்னைத்
துலக்க வழி தெரியாமல்
தூயவனே உன்னிடத்தில்
தொலைக்க வழி தேடுகிறேன்

தண்ணீரில் போகாத
தடித்த கரைகளுண்டு
கண்ணீரில் கழுவினால்
கரையாத கரையுண்டோ?

முகம் பார்க்கும் கண்ணாடி இங்குண்டு

எனக்கு ஒரு அகம் பார்க்கும் கண்ணாடி
அளிப்பதற்கு மறுப்பாயோ?

எல்லையில்லா உன் புகழை
எடுத்துரைக்க வந்த சிறு
பிள்ளைதான் நான்.... எனது
பிஞ்சுமொழி கேளாயோ?

குவலயமே நன்கொடையாய்க்
கொடுத்தவன் நீ... என்னுடைய
கவலையெல்லாம் தீர இன்று
கவிதை தர மாட்டாயோ...?

என்னுடைய தகுதியினை
எண்ணி நான் பாடவில்லை....
உன்னுடைய தகுதியினை
உணர்ந்ததால் பாடுகிறேன்!

உன்னிடத்தைத் தேடி
ஓடிவர இயலேன் நான்
என்னிடத்தைத் தேடி உன்
இறையருளும் வாராதோ?

உன்னிடத்தில் என்னை
ஒப்புவித்த பின்னே
என்னுடைய குறையெல்லாம்
எனதென்ப தெவ்வாறோ?

வள்ளல் நபி கதையை
வரைகின்றேன் – காவியத்தின்
உள்ளே நீ நிறைந்து
ஒளியேற்ற மாட்டாயோ...?

தெரியாமல் நான் இந்த
தீன் நெருப்பை தொட்டுவிட்டேன்
கருகாமல் சுடர் வீசக்
கருணையினைக் காட்டாயா?

எனக்காக இல்லை எனினும்
இறைதூதர் ஏந்தல் நபி

தனக்காக இங் கெனக்குத்
தமிழெடுத்து நீட்டாயா?

@@@@@@@@@@@@@@

நாயகம் ஒரு காவியம்

பிறப்பு

அரபு நாட்டில் மக்கா நகரில்
அப்துல்லா மகனாய் பிறந்த நபி!

அழகில் அறிவில் சிறந்த நபி!

இரவின் இருட்டை விரட்டும் கதிராய்
இறைவன் அனுப்பிய உதய நபி!

இறுதி தூதர் இதய நபி!

அப்துல் முத்தலிபின் பேரக் குழந்தையாய்
அவதரித் திட்ட ஏந்தல் நபி!

அகத்தில் புறத்தில் சாந்த நபி!

ஒப்பில் லாத இறைவன் ஒருவனே
உணர்வீர் என்றே உரைத்த நபி!

உருவ வழிப்பாட்டை மறுத்த நபி!

அன்னை ஆமினா வயிற்றில் வளர்கையில்
அன்புத் தந்தையை இழந்த நபி!

அநாதை யாகவே பிறந்த நபி!

மண்ணுயி ரெல்லாம் தன்னுயி ரென்றே

மானுடம் வாழச் செய்த நபி!

மறைநூல் கொண்டு நெய்த நபி!

@@@@@@@@@@@@@@@

நாயகம் ஒரு காவியம்

பாலூட்ட வந்த அன்னை

குத்து விளக்காய் வளர்ந்த குழந்தைக்குப்
புத்தமு தூட்டுவதார்? – அந்தப்
புகழினை ஈட்டுவதார்?

உத்தம அலிமா செவிலித் தாய்க்குக்
கிடைத்தது நல வாய்ப்பு – கையில்
கிண்கிணிப் புன்னகைப் பூ.

தந்தையில் லாத அனாதைக் குழந்தைக்குத்
தந்தார் பாலமுது – அலிமா
தாய்க்கோ பொன்மனது!

சந்திரப் பிறையாய் சந்தன மணமாய்
முகமது வளர்கின்றார் – ஆமினா
'அகமது' என்கின்றார்!

@@@@@@@@@@@@@

நாயகம் ஒரு காவியம்

காவிய நாயகர்

முழு நிலவே! வள்ளல் முகமதே!
உங்களை நான் பிறைநிலாச்சொற்களால்
பேசுகிறேன்.....

மனிதர்களில் இவர் ஒரு மாதிரி...
அழகிய முன்மாதிரி!

உலக அதிசயங்களில் இது ஓர் ஒப்பற்ற அதிசயம்......
காலடியில் மகுடங்கள் காத்துக் கிடந்தன.......
இவரோ ஓர் ஏழையாகவே இறுதிவரை வாழ்ந்தார்!

உலக அதிசயங்களில் இது ஓர் ஒப்பற்ற அதிசயம்
எல்லாரும் வாயிட் கதவுகளைத்
தட்டிக்கொண்டிருந்தார்கள்.
இறுதி நபியாய் எழுந்தருளிய இவர்தான்
தாழிட்ட மனக்கதவைத் தட்டினார்.

அகதியாய் இதயங்கள் அலைந்து கொண்டிருந்தபோது இவருடைய
தோள்களே மானுடத்தைத் தூக்கிக் கொண்டன.

கை கொடுத்த இவருடைய “கை” - தொழுகை

எழுத படிக்கத் தெரியாதவர்தான்....
ஆனால் இவர்தான் பூமியின் புத்தகம்!

சிம்மாசனங்களில் இவர் வீற்றிருந்ததில்லை
அண்ணலார் அமர்ந்த இடமெல்லாம்
அரியனையானது!

கிரீடங்களை இவர் சூட்டிக்கொண்டதில்லை
பெருமானார் தலையில் தரித்ததெல்லாம்
“மணிமகுடம்” என்றே மகத்துவம் பெற்றது!

மக்கத்து மண்ணை இவர் போர் தொடுத்து வென்றார் அகில உலகத்தையும்
போர் தொடுக்காமலே வெற்றி பெற்றார்!

கவலைகளால் இதயம் கனக்கும் வேளையில்
பெருமானாரின் நினைவுக்குளத்தில் நான்
நீராடுவேன் –
இதயக்கவலைகள் எடை இழந்து போகும்

நடைபயிலும் கால்கள் எங்கேனும்நாட்காட்டி ஆனதுண்டோ?
மக்காவிலிருந்து மதீனாவுக்கு இவர் நடந்தார் -
ஹிஜ்ரி என்னும் ஆண்டுக்கணக்கு ஆரம்பமானது!

இவர் இறைவனின் துறைமுகம்!
இங்கேதான் திருமறை இறக்குமதியானது!

இவர் இறைவனின் துறைமுகம்!
இங்கிருந்துதான் திருமறை
எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதியானது

@@@@@@@@@@@@@@@@@@@@@

நாயகம் ஒரு காவியம்

வளர்ப்பு

மக்கா நகரில் மாபெரும் விருந்து

மண்டபத்துள்ளே பெருங் கூட்டம்!

மலருக்குப் பெயரிடும் கொண்டாட்டம்!

பக்கத்தில் வந்து அப்துல் முத்தலிபு

“முகம்மது” என்றே பெயரிட்டார்!

பேரனைப் பாசத்தில் பயிரிட்டார்!

@@@@@@@@@@@@@@

நாயகம் ஒரு காவியம்

கவிக்குரல்

கல்லாத நபியே! நீங்கள் கற்றதெல்லாம்
அல்லாஹ் என்னும் ஆசானிடத்திலோ?

பள்ளிக்கூடத்தையே பார்க்காத நீங்கள்
பள்ளிகளைக் கட்டிக் கொடுத்தீர்களே.....
படைத்தவனை ஐவேளை படிப்பதற்காகவோ?


அறிய அறியத்தான் அறியாமை தெரியுமோ?
அதற்காகத்தான் கல்வியை எங்கள் கடமையாக்கினீர்களோ?


'எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக்
கற்றுக் கொடுத்தால் கைதிக்கு விடுதலை' என்றீர்களே.....
நீங்கள்தான் எழுத்தறிவு இயக்கத்தின் வேரோ? அறிவொளி
இயக்கத்தின் ஆணிவேரோ?

உம்மி நபியாய் உலகிற்கு வந்தவரே!
பாரெல்லாம் நடைப்பெறும் உங்கள்
பல்கலைக் கழகத்தில் பாடங்கள் ஐந்தோ?
'கலிமா' 'தொழுகை' 'நோன்பு' 'ஜக்காத்'
'ஹஜ்' என்னும் பாடங்கள் ஐந்தோ?

@@@@@@@@@@@@@@@@@@


















மேத்தாவின் கவிதைகளில் தமிழும் தமிழினமும்

By ப. லட்சமி

https://puthu.thinnai.com/2013/07/29/%e0%ae%ae%e0%af%87%e0%ae%a4%e0%af%8d%e0%ae%a4%e0%ae%be%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%a9%e0%af%8d-%e0%ae%95%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%a4%e0%af%88%e0%ae%95%e0%ae%b3%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%a4%e0%ae%ae/

ப.லெட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
ஈ.வெ.ரா பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

படைப்பாளர்கள் தற்கால நிகழ்வுகளோடு ஒட்டித் தம் பதிவுகளைப் படைப்புக்களில் பதிய வைக்கின்றனர். இதன் காரணமாக படைப்புகள் உயிர்த்தன்மையுடன் திகழ்கின்றன. கவிஞர் மேத்தா வானம்பாடி இயக்க காலக் கவிஞராவார். தொடர்ந்து புதுக்கவிதைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் இவர் அவ்வப்போது தமிழ்ச்சமுதாயம் பற்றிய பல விமர்சனங்களைத் தந்து தமிழ்ச்சமுதாயத்தின் இக்கட்டுக்களை, ஏற்ற இறக்கங்களை மதிப்பிட்டு அது சரியான வழியில் நடைபோட ஆக்கமும் ஊக்கமும் மிக்கக் கவிதைகளை படைத்தளித்து வருகின்றார்.

“வெவ்வேறு வகையான நாலூரில் சுற்றிவரும் நாடோடிக் கவிஞன் நான், பசித்து அழும் ஏழையர்க்காய்ப் பால் ஊறும் கவி மார்பின் பணி மட்டும் நிற்காது ” என்று சமுதாய நோக்கம் மிகுந்த கவிதைகளை அளிப்பதே தன் பணி எனக் கவிதைகளைப் படைத்து வருபவர் மேத்தா ஆவார். இவர் தன் மொழி வளரவேண்டும், தன் சமுகம் வளரவேண்டும் என்ற எண்ணத்தில் பல கவிதைகளைப் புனைந்துள்ளார். இவரின் கவிதைகள் தரும் தமிழ், தமிழ்ச்சமுதாயம் பற்றிய சிந்தனைகளை இக்கட்டுரை தொகுத்தளிக்கின்றது.

தமிழ்மொழி

தமிழ் தமிழர்களின் தாய்மொழி. ஆனால் தமிழ் மொழியைத் தமிழர்களே புறக்கணிக்கும்போக்குத் தற்போது காண்படுகிறது என்பதைத் தன் கவிதைகளில் எடுத்துரைக்கின்றார் மேத்தா.

“தமிழில் எனக்குப்

பேசவராது – என்று

சொல்வதுகூட ஒரு

தகுதியாகி விட்டது”(மு,மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப்பாடகள், ப. 99)

என்று தமிழ்மொழியில் தாய்மொழியில் பேசுவதை இழிவாக நினைக்கும் தமிழ்ச்சமுதாயத்தின் அவலத்தை இக்கவிதை எடுத்துரைக்கின்றது.

தமிழ் மொழி வல்லுநர்கள், அறிஞர்கள், புலவர்கள் இவர்களிடத்தில் தமிழ் மொழி வளர வாய்ப்பிருக்கிறது. ஆனால் அவர்களாலும் தமிழ் மொழி வளரவில்லை என்று கருதுகிறார் மேத்தா,

“தமிழ் என்கிற

தங்கச் சீப்பு

எப்போதும் உள்ளது

எங்கள் கைகளில்

இருந்து பயனென்ன?

ஒவ்வொரு நாளும்

ஒருவரை ஒருவர்

மொட்டையடிக்கிற முயற்சியில்

உள்ளோமே!

எங்களிடம்

எந்தச் சீப்பிருந்து

என்ன பயன்" (மு.மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்,ப. 22)

என்ற இந்தக் கவிதையில் தமிழ் தங்கச் சீப்பு என்ற குறியீடாகக் காட்டப் பெற்றுள்ளது. சீப்பு தலைமுடியை வாரிவிடுகிற நல்ல தொழிலைச் செய்யக் கூடியது. ஆனால் அதற்கு வாய்ப்பு வைக்காமல் தமிழ் அறிந்தவர்கள் ஒருவரை ஒருவர் குறை கூறி எந்தச் செயலையும் செய்யாமல் இருப்பதாக மேத்தா கருதுகின்றார்.

தமிழ் இனம்

தமிழ் இனம் தமிழ்நாட்டில் காலூன்றி இருப்பதுடன் பல வெளிநாடுகளிலும் தன் பரவலை பரவலாக்கியுள்ளது. இதன் காரணமாக உலகம் முழுவதும் தமிழினம் பரவியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் எல்லா இடங்களிலும் தமிழினத்திற்குப் பல தடைகள் எழுந்து வருகின்றன. இதனைக் கருத்தி;ல் கொண்டு மேத்தா பல கவிதைகளைப் படைத்தளித்துள்ளார்.

"தமிழினமே தமிழினமே

உனக்கு மட்டும்தான்

உள்ளத்தில் உறுதி உண்டு

ஊர் ஊராக

உதைபடுவதற்கு"(,மேத்தா, கனவுக் குதிரைகள், ப. 23)

என்ற கவிதை தமிழினம் எங்கு சென்றாலும் உதைபடும் சமுதாயமாக இருக்கிறது என்று கவலை கொள்ளுகின்றார் மேத்தா.

பக்கத்து மாநிலங்களில் கூட தமிழர்கள் கவலையின்றி வாழ முடியாத சூழலை இவரின் மற்றொரு கவிதை தெரிவிக்கின்றது.

"ஆற்றுநீரை

அனுப்புங்கள் என்றோம்

தமிழர்களை

ஒட்டுமொத்தமாக

ஊருக்கு

அனுப்பிவிட்டார்கள்"(மு.மேத்தா, கனவுக்குதிரைகள்,ப.23)

என்று கர்நாடக மாநிலத்தின் தண்ணீர் தராத நிலையையும் தமிழர்களை விரட்டும் நிலையையும் எளிமையான கவிதை அடிகளால் புரிய வைத்துவிடுகிறார் மேத்தா.

"சுட்டும் விழிச்சுடரால்

சுதந்திர ஈழத்தின்

ஜோதியைத்

தரிசிக்கக் காத்திருந்த

தமிழனின் கண்கள்

சிறைக்குள்ளேயே

சிதைக்கப்பட்டதாம்"(மு,மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்,ப. 45)

என்று இலங்கையில் நடைபெற்ற தமிழர்க்கெதிரான நடவடிக்கைகளின் சாரத்தை சிற்சில கவியடிகளுக்குள் காட்டி நிற்கிறார் மேத்தா.

"எல்லார்க்கும் விருந்தளித்து

ஏற்றம் பெற்ற

எங்கள் இனம்

மரண தேவதையின்

கோரப்பசிக்கு

விருந்து கொடுத்தபிறகு

அங்கே

இப்போது

அகதியானது"(மு.மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், ப.61)

என்ற கவிதை இலங்கைத் தமிழர் நிலையின் இறுதியை எடுத்துரைப்பதாக உள்ளது. இக்கவிதை 1984 ஆம் ஆண்டு மேத்தாவால் எழுதப்பெற்ற கவிதை. ஆனால் இன்றைக்கு இலங்கைத் தமிழர்கள் சந்திக்கும் அவலத்தை அன்றைக்கே எடுத்துரைப்பதாக இது விளங்குகின்றது.

தமிழக அரசியல் நிலைப்பாட்டின் காரணமாகத் தமிழினம் தரமிழந்து போனதை ஒரு சிறுகவிதைக்குள் அடக்கிக் காட்டுகின்றார் மேத்தா.

"நீதி கிடைக்குமென்று –மனு

நீதிச் சோழனிடம்- ஒரு

தூது அனுப்பிவைத்தோம்- அவன்

தூதனைக் கொன்றுவிட்டான்

காவல் நிலையத்திலே – சொந்த

கணவன் கண்ணெதிரில்- ஏழைக்

கண்ணகி கற்பிழந்தாள் – தூக்கில்

கோவலன் தொங்குகிறான்"(மு.மேத்தா, கனவுக்குதிரைகள்,ப. 53

என்ற கவித்தொடர்கள் இக்காலத் தமிழகத்தின் இன்னல் மிக்க சூழல்களை எடுத்துரைப்பதாக உள்ளது.

"எங்கள் தேசத்தில்

ஒவ்வொரு கட்சிக் கொடியும்

உயரத்தில்தான் பறக்கிறது

எங்கள் சகோதரர்களின்

தாழ்ந்து குனிந்த

தலைக் கம்பங்கள் மீது’’(மு,மேத்தா, திருவிழாவில் ஒரு தெரு;பாடகன், ப. 10)

என்று தமிழகத்தின் அரசியல் நிலைப்பாட்டை மேத்தாவின் மேற்கவிதை எடுத்துரைக்கின்றது.

தமிழ், தமிழினம் பற்றிய மேத்தாவின் விமர்சனங்கள் சமுதாயம் திருந்துவதற்கு வாய்;ப்பளிப்பனவாகும். இவரின் இந்த எச்சரிக்கைகளை ஏற்றுத் தமி;ழ்ச்சமுதாயம் நலம் பெற்றால் அது மேத்தாவின் சிந்தனைகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

____

பயன்கொண்ட நூல்கள்

மு,மேத்தா, மனிதனைத்தேடி, கவிதா பப்ளிகேசன்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2004

மு,மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், திருமகள் நிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு, 2004

மு,மேத்தா, கனவுக்குதிரைகள், திருமகள் நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 2004

மு.மேத்தா, முகத்துக்குமுகம், திருமகள் நிலையம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு,

one_zero@rediffmail.com

இசைஞானி இளையராஜா இசையில்

பாடலாசிரியர் மு.மேத்தா

http://www.radiospathy.com/2014/09/blog-post_5.html




இன்று கவிஞர் மு.மேத்தா அவர்களின் பிறந்த நாள். தமிழில் புதுக்கவிதை படைத்த முன்னோடிகளில் சிறப்பான தனியிடம்

பெற்றவர் என்ற தகமையைத் தாண்டி, ஈழப்பிரச்சனை குறித்து அன்று தொட்டு இன்றுவரை "தெளிவான" சிந்தனையோடு இயங்கும் மிகச்சில படைப்பாளிகளில் இவரும் ஒருவர் என்ற மேலதிக காரணத்தால் மு.மேத்தா அவர்களின் மீது எனக்கு இன்னும் ஒருபடி அதிகப்படியான நேசத்தை என்னுள் விதைத்து வைத்திருக்கிறேன். ஒருமுறை ஆனந்த விகடனில் இவர் எழுதிய சிறுகதை ஒன்றில் ஈழத்தமிழர் தரப்பின் நியாத்தை மறைபொருளாகச் சுட்டி எழுதியிருந்தார். அதற்கு முன்னரே ஈழத்தின் எண்பத்து மூன்றுகளின் அவலங்களை

***"எல்லார்க்கும் விருந்தளித்து
ஏற்றம் பெற்ற எங்கள் இனம்
மரணதேவதையின் கோரப்பசிக்கு
விருந்து கொடுத்த பின்
அங்கே இப்போது அகதியானது"***

போன்ற புதுக்கவிதைகள் தாங்கிய "திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்" என்ற தொகுதியில் கொடுத்திருப்பார்.

மு.மேத்தாவின் கவிதைகளை அவரின் "ஊர்வலம்" என்ற கவிதைத் தொகுதியே எனக்கு அறிமுகப்படுத்தியது. பின்னர் அவளுக்கு ஒரு கடிதம், நடந்த நாடகங்கள், முகத்துக்கு முகம், அவர்கள் வருகிறார்கள், கண்ணீர்ப்பூக்கள், வெளிச்சம் வெளியே இல்லை, நந்தவன நாட்கள், மு.மேத்தா முன்னுரைகள், மு.மேத்தா திரையிசைப்பாடல்கள் என்று வாங்கிக் குவித்தேன். பத்து வருடங்களுக்கு முன்னர் "காதலர் கீதங்கள்" என்ற வானொலித் தொகுப்பைத் தயாரித்து வழங்கியபோது வெறுமனே காதல் பாடல்களை மட்டும் சேர்த்து இட்டு நிரப்பாமல், பின்னணி இசையோடு அவரின் கவிதைத் தொகுதிகளில் இருந்து இரண்டடி வரிகளை எடுத்துக் கொடுத்துவிட்டு அதற்கேற்ற சூழலுக்குப் பொருந்துமாற்போலப் பாடல்களை இணைத்துக் கொடுத்தேன். அந்தப் படைப்பு நேயர்களைக் கவரவே பின்னர் தாங்களும் ஈரடிக் கவிதையோடு பாடல்களை இணைத்து வானொலிப் பிரதியாக அனுப்பி நிகழ்ச்சி தயாரிக்க வைத்தார்கள். கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் இந்த நிகழ்ச்சியைச் செய்தேன்.



மு.மேத்தாவின் புதுக்கவிதைகளை நடிகர் முரளியின் ஏக்கம் கலந்த தொனியில் அந்தக் காதலன் உள்ளக்கிடக்கையாகக் கொடுத்த இதயம் படம் சிறப்பானது.அந்த ஒலிப்பகிர்வுகளை இங்கே கொடுத்திருக்கிறேன்.
http://www.radiospathy.com/2011/02/www-www.html

கண்ணதாசன், வாலி, வைரமுத்து, முத்துலிங்கம் உள்ளிட்ட வெற்றிகரமான திரையிசைப்பாடலாசிரியர்கள் தம் திரையிசை அனுபவங்கள், பாடல் பிறந்த கதைகளை நூலுருவில் கொடுத்தது போன்றே மு.மேத்தா அவர்களும் தனது திரையிசைப்பாடல்கள் நூலில் தன் ஆரம்பகாலப் படங்களின் பாடல்கள் உருவான சுவையான பின்னணி மற்றும் காட்சிக்குப் பொருந்திய பாடல் வரிகளின் நியாயத்தை எல்லாம் நிறுவியிருப்பார். அத்தோடு பிரபல வானொலி, தொலைக்காட்சிப் படைப்பாளர் பி.ஹெச்.அப்துல்ஹமீத் அவர்கள், கலைஞர் தொலைக்காட்சியில் படைத்த இன்னிசை மழை என்ற நிகழ்ச்சியிலும் மு.மேத்தாவின் பாடல் அனுபவங்கள் சிறப்பாகப் பதிவாகியிருக்கின்றன.

"அனிச்ச மலர்" என்ற படத்தில் சங்கர்-கணேஷ் இசையில் அறிமுகமான மு.மேத்தாவுக்கு "ஆகாய கங்கை" என்ற இசைஞானி இளையராஜாவின் இசையில் மலர்ந்த படத்தின் "தேனருவியில் நனைந்திடும்"
http://www.youtube.com/watch?v=IrCmn2WdRSE&sns=em
என்ற பாடலே அதிக புகழைக் கொடுத்தது. அந்தப் பாடல் வாய்ப்பை மு.மேத்தாவின் நண்பர் கமல்ஹாசனே பெற்றுக் கொடுக்கக் காரணமாக அமைந்தாராம்.

தொடர்ந்து இதய கோவில் படத்தில் இடம்பெற்ற "யார் வீட்டில் ரோஜா

பூப்பூத்ததோ" http://www.youtube.com/watch?v=jRCh-b-a334&sns=em
நான் சிகப்பு மனிதன் திரைப்படத்தில் இடம்பிடித்த "பெண்மானே சங்கீதம் பாடிவா" http://www.youtube.com/watch?v=Dj-cimDzqoY&sns=em
சொல்ல துடிக்குது மனசு படத்தில் வந்த "வாயக்கட்டி வயித்தக் கட்டி"
http://www.youtube.com/watch?v=JVOdYtytRNk&sns=em
என் புருஷன் எனக்கு மட்டும் தான் படத்தில் வந்த "மனதில் ஒரே ஒரு பூப்பூத்தது"
http://www.youtube.com/watch?v=Q2VC0QoqHoc&sns=em
கோடை மழை படத்தில் இடம்பெற்ற "பல பல பல பல குருவி"
http://www.youtube.com/watch?v=qWyuY1UQyjU&sns=em
போன்ற இனிமையான பாடல்களுக்குச் சொந்தக்காரர் மு.மேத்தா.
உதய கீதம் படத்தில் வந்த "பாடு நிலாவே தேன் கவிதை"
http://www.youtube.com/watch?v=nrTKUhNQaWg&sns=em
பாடலை நாயகி பாடுவது போல் ஆரம்பித்து நாயகனும் இணையும் வேளை நாயகனும் பாடு நிலாவே என்று பாடுவது பொருந்தாது ஏனென்றால் அவன் மூடிய சிறைக்குள் இருந்து அவளின் குரல்கேட்டுப் பாடுகிறானே எனவே "பாடும் நிலாவே" என்று மாற்றி பாடல் வரிகளில் நுணுக்கம் இருக்க வேண்டிய தேவையைச் சுட்டினாராம் இளையராஜா.

"ராஜராஜ சோழன் நான்"
http://www.youtube.com/watch?v=7f1kEtA-xRM&sns=em
என்ற ரெட்டைவால் குருவி படப்பாடலே மு.மேத்தாவைப் பரவலாகக் கொண்டு சேர்த்த இனிய பாடல். அந்தப் பாடல் ஒன்றே போதும் மு.மேத்தாவின் கவிச்சிறப்பைத் திரையில் காட்ட.

வேலைக்காரன் படத்தின் படக்குழு இயக்குனர் எஸ்.பி.முத்துராமனுடன் வட நாட்டுக்குச் சென்றுவிட, அந்தப் படத்தின் தயாரிப்பு நிறுவனமான கவிதாலயா சார்பில் இயக்குனர் கே.பாலசந்தரே ஒவ்வொரு பாடலுக்குமான கதைக்களனைச் சொல்லி மு.மேத்தாவை அனைத்துப் பாடல்களையும் எழுத வைத்து, இசைஞானி இளையராஜா இசையில் கொண்டுவந்தது ஒரு புதுமை. "தாஜ்மஹாலின் காதிலே ராம காதை கூறலாம்" என்று சமூக சிந்தனையை "வா வா வா கண்ணா வா" காதல் பாடலில் புகுத்தியிருப்பார் மு.மேத்தா.

தன் திரைப்படப் பாடல்கள் தொகுப்பில் கவிஞர் மு.மேத்தா இப்படிக் கூறுகின்றார்.
"தென்றல் வரும் தெரு" http://www.youtube.com/watch?v=oeN1fVS-Psg&sns=em
என்று சிறையில் சில ராகங்கள் படத்துக்குப் பாடல் எழுதினேன்.

இப்பாடலின் தொடக்க வார்த்தைகளே பின்னர் நான் நண்பர்களுடன் சேர்ந்து தயாரித்த திரைப்படத்தின் பெயரானது. வேறு பெயர் வைக்கலாம் என்று நான் விரும்பினேன். பெயரை மாற்றக்கூடாது என்று மொத்த யுனிட்டே பிடிவாதம் பிடித்தது.

நான் தயாரித்த "தென்றல் வரும் தெரு" திரைப்படத்திலும் இதே பாடல் வரிகளை முதல் அடிகளாகக் கொண்டே பாடல் ஒன்று இருக்கின்றது. அப்பாடலின் வரிகளை மாற்றலாமே என்று இளையராஜா கேட்டார். கதைச் சூழலுக்காக இந்த வரி கட்டாயம் வேண்டும் என்று வேண்டினோம்.

இரண்டு பாடல்களுக்கும் முதல் வரிகள் இரண்டும் ஒன்றே. இசை வேறு, இரண்டுக்கும் ஒரே இசையமைப்பாளர் இளையராஜா. "தென்றல் வரும் தெரு அது நீ தானே" என்ற பாடல் வரிகளை முதல் அடியாகக் கொண்டு "சிறையில் சில ராகங்கள்" திரைப்படம் 1990 இல் வெளியானது. அது நடிகர் முரளி, பல்லவி நடிப்பில் வெளியானது.அடிகள் பயன்பட்ட மு.மேத்தாவின் தயாரிப்பில் வந்த "தென்றல் வரும் தெரு" ரமேஷ் அரவிந்த், கஸ்தூரி நடிப்பில் வெளியானது. நான்கு ஆண்டுகள் கழித்து 1994 இல் தான் படம் வந்தது.
இந்தப் படத்திலும் தென்றல் வரும் தெரு http://www.youtube.com/watch?v=ZvtCLpjMnvw&sns=em
என்று இன்னொரு பாடலை எழுதியிருப்பார் மு.மேத்தா.
மு.மேத்தாவின் திரையிசைப் பயணத்தில் இப்படிக் கிட்டிய எண்ணற்ற முத்துகள் ஏராளம்.

இசைஞானி இளையராஜாவுடன் இணைந்து பணிபுரியும் பாடலாசிரியர்களில் வாலிக்குப் பின்னர் இன்னமும் தொடர்ந்து சேர்ந்திசையாகப் பயணிக்கும் கவிஞர் மு.மேத்தாவுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்.

"கண்ணீர்ப் பூக்கள் கிடைத்தது எப்படி?" - மு.மேத்தா பிறந்த தின சிறப்புப் பகிர்வு

https://www.vikatan.com/arts/literature/tamil-poet-mu-metha-birthday-special-article

**"உஷாவாய்ப் பிறந்திருந்தால்
ஓடிப் பிழைத்திருப்பேன்...
உஷா உதுப்பாய்ப் பிறந்திருந்தால்
பாடிப் பிழைத்திருப்பேன்...
யாரையும் நாடிப்
பிழைக்கத் தெரியாததால்
வாடிப் பிழைத்துக் கொண்டிருக்கிறேன்!"**

- தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கவிஞர் மு.மேத்தா பாடிய கவிதை வரிகள் இவை.


@@@@@@@@@@@@@

அப்போது, சென்னை நந்தனம் அரசுக் கலைக் கல்லூரியில் மு.மேத்தா பேராசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது அவரின் மாணவராக நான் இருந்தேன். அந்தச் சமயத்தில், நடிகைகள் சிலுக்கு, குஷ்புவின் பெயர்களை வைத்து ஓரிரு வரிகள் எழுதிவிட்டு, `நடிகையாய் பிறக்காததால் நாடாள முடியாமல் தவிக்கிறேன்!' என மு.மேத்தா பாணியிலேயே கவிதை பாடிக் காட்டினேன்.



"நன்றாக இருக்கிறது. ஆனால், சுயமாக எழுது" எனச் சொல்லி கவிதை எழுதுவதற்கான இலக்கணத்தைச் சொல்லியும் கொடுத்தார்.

புதுக்கவிதையில் புதிய விடியலைப் படைத்தவர் மு.மேத்தா. 'அதிக வாசகர்களைப் பெற்ற கவிஞர்' என்ற பெருமையைப் பெற்றவர். அவருடைய கண்ணீர்ப் பூக்கள் பல பதிப்புகளைக் கண்டது.



ஒருமுறை கவிஞர் அறிவுமதி பேசியபோது, ''மு.மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள் கவிதை நூலைக் கையில் வைத்திருப்பதே கௌரவம்" எனச் சொன்னார். கவிஞர் வாலியின் 'அவதார புருஷன்' எழுதுவதற்கு விதை போட்டது மு.மேத்தா எழுதிய 'நாயகம் ஒரு காவியம்' என்கிற நூல்தான். வாலியை நான் சந்தித்தபோது 'நாயகம் ஒரு காவியம்' நூலை என்னிடம் சிலாகித்துப் பேசினார். ''அவதார புருஷர் அவதரிக்க நாயகம் காரணம்'' என்றார் வாலி.

நடப்பு அரசியலையும் நாட்டு நடப்பையும் தன் கவிதைகளில் பதியம் போட்டுக்கொண்டே இருந்தார் மேத்தா. ''அணு ஆயுதங்கள் இருக்கிறது'' எனச் சொல்லி இராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோது மு.மேத்தாவின் பேனா எழுதியது.

இராக் அழிந்து

சிதைந்த பிறகுதான்

தெரிந்தது

பேரழிவு ஆயுதங்கள்

எவர் கையில்

இருந்ததென்பது !

எண்ணெய்க்காக வளைகுடா நாடுகள் வளைக்கப்பட்டபோது மு.மேத்தா இப்படி எழுதினார்.

தலையில் எண்ணெய்

தடவுவார்கள் உலகில்...

அமெரிக்காவோ


எண்ணெய்க்காகவே

வளைகுடா நாடுகளின்

தலையைத் தடவுகிறது !

1970-*களில்தான் 'கண்ணீர்ப் பூக்கள்' நூலைப் படைத்தார், மு.மேத்தா. தமிழ்ப் புதுக்கவிதைப் புத்தகங்களில் அதிக விற்பனையைப் படைத்த புத்தகம் கண்ணீர்ப் பூக்கள். பல பதிப்புகளைக் கண்ட அந்தப் புத்தகத்தின் முதல் பதிப்பு அவ்வளவு எளிதாக வெளியாகிவிடவில்லை. முனைவர் பட்ட ஆய்வுக்காக மு.மேத்தாவைச் சந்திக்கப் போனார் பேராசிரியர், ஹாஜா கனி. அப்போது கண்ணீர்ப் பூக்கள் பிறந்த கதையை அவரிடம் சொல்லியிருக்கிறார், மு.மேத்தா.*

“கண்ணகி சிலம்பைக் கழட்டினாள், சிலப்பதிகாரம் கிடைத்தது. என் மனைவி வளையலைக் கழட்டினாள் கண்ணீர்ப் பூக்கள் கிடைத்தது” என்றார். மு.மேத்தாவின் மனைவி மல்லிகாவின் வளையலே, கண்ணீர்ப் பூக்கள் புத்தகமாக வெளியாவதற்குக் காரணம். ஆனந்த விகடனின் பொன் விழா கொண்டாட்டத்தின்போது நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் மேத்தா எழுதிய 'சோழ நிலா' நாவலுக்கு முதல் பரிசு கிடைத்தது.



Muhammed Metha

திரைப்பாடல்களிலும் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார், மு.மேத்தா. 'பெண் மானே சங்கீதம்...' 'யார் வீட்டில் ரோஜா...' 'பாடு நிலாவே...' 'ராஜராஜ சோழன் நான்...' 'கற்பூர பொம்மை ஒன்று...' 'மயில்போல பொண்ணு ஒண்ணு' எனத் தடம் பதித்திருக்கிறார். 'பூமணி' படத்தில் ' எம்பாட்டு எம்பாட்டு...' பாடலை எழுதியிருந்தார். அந்தப் படத்தின் கேசட்டில் பாடல் எழுதிய பாடலாசிரியரின் பெயர் இல்லை. ''பாடலுக்காக இசையமைத்த இசையமைப்பாளரின் பெயரையும் பாடகரின் பெயரையும் குறிப்பிடுகிறவர்கள், அந்தப் பாடலை எழுதிய பாடலாசிரியரின் பெயரைச் சொல்வதில் என்ன தயக்கம்? அது எம்பாட்டு எம்பாட்டு'' என மேடையிலேயே உரிமையை நிலைநாட்டினார் மேத்தா.

அந்த மேத்தாவுக்கு இன்று (செப்டம்பர் 5) 75-வது பிறந்தநாள். அவரைக் கௌரவிக்கும் வகையில் மு.மேத்தா அறக்கட்டளை ஒன்று புதுக்கல்லூரி தமிழ்த்துறையில் தொடங்கப்படுகிறது.

நம்பிக்கை நார் மட்டும்

நம் கையில் இருந்தால்

உதிர்ந்த பூக்களும்

ஒவ்வொன்றாய் ஒட்டிக்கொள்ளும்


கழுத்து மாலையாய்

தன்னைத்தானே கட்டிக்கொள்ளும்!

நம்பிக்கை விதைக்கும் மேத்தாவின் வரிகள்.

மு. மேத்தா கவிதைகள் ! நூல்ஆசிரியர் : கவிஞர் மு. மேத்தா ! நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !

https://eraeravi.blogspot.com/2015/07/blog-post_584.html



நூல்ஆசிரியர் : கவிஞர் மு. மேத்தா !

நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !

கவிதா வெளியீடு, 8, மாசிலாமணி தெரு, பாண்டி பசார், சென்னை-600 017. விலை : ரூ. 180.

*****

புதுக்கவிதை என்று சொன்னவுடன் அனைவரின் நினைவிற்கும் மோனையைப் போல முந்தி வந்து நிற்பவர் கவிஞர் மு. மேத்தா. கவி வேந்தர் பட்டம், பரிசு, விருது, பாராட்டு என்று பல பெற்று இருந்த போதும், எதையும் தலையில் ஏற்றிக் கொள்ளாத எளிய மனிதர், இனியவர், பண்பாளர், பந்தா எதுவும் இல்லாத மாமனிதர், பெரும்பாலும் அவர் மதுரைக்கு வரும்போதெல்லாம்

சந்திப்பது உண்டு. தொடர்வண்டி நிலையம் வரை சென்று வழியனுப்பியதும் உண்டு.

தமிழ்த்தேனீ இரா. மோகன் அவர்களுடன் நான் உள்பட பட்டிமன்ற குழுவினர் அனைவரும், கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் சென்னையில் உள்ள இல்லத்திற்கு முன்அறிவிப்பு இன்றி சென்று இருந்தோம். அவர் சென்னைக்காரர்கள் போல இல்லாமல் பழங்கள் வழங்கி உபசரித்து கலந்துரையாடி வழிஅனுப்பி வைத்தார்.

அப்போது முனைவர் பட்ட ஆய்வாளர் திரு. இளையராஜா அவரிடம் உதவியாளராக இருந்தார். அவரது ஆய்வில் எனது ஹைக்கூ கவிதைகளை மேற்கோள் காட்டியவர். கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் மனைவியும் இன்முகத்தோடு வரவேற்று மகிழ்ந்தார்கள். கண்ணீர் பூக்கள் என்ற நூல் வெளிவருவதற்கு தனது நகைகளைத் தந்து உதவிய தங்கமங்கை அவர்கள். பசுமரத்து ஆணி போல பதிந்தது அன்றைய சந்திப்பு. கவிவேந்தர் மு. மேத்தா அவர்கள் கர்வம் என்றால் என்னவென்றே அறியாத முன்மாதிரி-யான கவிஞர்.

எனது இனிய நண்பர் வதிலை கவிவாணன் அவர்கள் கவிவேந்தர்
மு. மேத்தா அவர்கள் பற்றி விரைவில் நூல் தொகுத்து வெளியிட உள்ளேன். நீங்கள் ஒரு கட்டுரை அனுப்புங்கள் என்றார். ஏற்கனவே
கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் கண்ணீர் பூக்கள் உள்பட பல நூல்களின் விமர்சனங்கள் இணையங்களில் பதிவு செய்துள்ளேன். அவற்றை அனுப்பவா? என்று கேட்ட போது அவர் 'மு. மேத்தா கவிதைகள்' என்ற நூல் வாங்கிப் படித்து, புதிய கட்டுரை ஒன்று அனுப்புங்கள் என்றார். அதன் விளைவே இந்தக் கட்டுரை.

கவிதா வெளியீடாக வந்துள்ள பெருமைமிகு நூல். கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் பல்வேறு நூல்களில்

இருந்து சாகித்ய அகதெமி விருதாளர் கவிஞர் சிற்பி புதுக்கவிதை ஆய்வாளர் கவிஞர் பாலா இருவரும் தேர்ந்தெடுத்து தொகுத்த நூல். மேத்தாவின் கவிதைகள், பழங்கள் என்றால் இந்த நூலில் பழரசமாக வழங்கி உள்ளனர். இந்த நூல் படித்தவர்கள் இதன் மூல நூல்கள் வாங்கிப் படிப்பார்கள். தேடிப் படிப்பார்கள். இன்றைய இளம் கவிஞர்கள், வளரும் கவிஞர்கள் அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

வாழும் காலத்திலேயே கவிவேந்தர் மு. மேத்தா அவர்களுக்கு அவரது படைப்புகளாலே மகுடம் சூட்டி மகிழ்ந்துள்ளனர். மகாகவி பாரதிக்கு அவர் வாழ்ந்த காலத்தில் இப்படி ஒரு சிறப்பு நடக்கவில்லை. நடந்திருந்தால் அவரை 39 வயதில் இழந்திருக்க மாட்டோம். மற்ற மாநிலங்கள் போல தமிழகத்தில் படைப்பாளிகளை வாழும் காலத்திலேயே பாராட்டி மகிழும் நிலை வர வேண்டும். திரைப்பட நடிகர்களுக்கு தரும் முக்கியத்துவத்தை படைப்பாளிகளுக்கு தர முன் வர வேண்டும்.

முனைவர் கவிஞர் சிற்பி அவர்களின் அணிந்துரையில் இருந்து சிறு துளிகள். "புதுக்கவிதையின் இரண்டாம் காலகட்டத்தில் ஒரு சகாப்தத்தைத் தனக்கே உரியதாகச் செதுக்கிக் கொண்டவர் கவிஞர் மு. மேத்தா.

வசீகரமான இளமை ததும்பத் ததும்ப அவர் எழுதிய கவிதைகளுக்குத் தமிழகத்தில் யாருக்கும் இல்லாத ஒரு வாசகர் பட்டாளம் உருவாயிற்று. இதை ஒரு வியப்புறு நிகழ்ச்சி (PHENOMENON) என்றே குறிப்பிட வேண்டும். இது மறைக்க முடியாத வரலாறு.

புதுக்கவிதையின் தாத்தா கவிவேந்தர் மேத்தா அவர்கள், இந்தியாவின் வரைபடத்தையே தனது புதுக்கவிதையில் காட்சிப்படுத்திம் அழகே அழகு!

எழுக … என் தேசமே!

தாயே !
உன்னுடைய கால்களோ
கன்னியாகுமரியின் கடற்கரை ஓரம்
உன்னுடைய தலையிலோ
இமயப்
பனிமலையின்
ஈரம் ...
வலதுகை தொடுவது
வங்காள் விரிகுடா ...
இடதுகை நனைவது
அரபிப் பெருங்கடல்!
இப்படி
ஈரம் சூழ இருந்தாலும்
உன் வயிற்றில்
எந்த நெருப்பு
எரிந்து கொண்டிருக்கிறது?
அதனால் தான்
ஆறுகள் என்கிற
ஈரத்துணிகளைக்
கட்டிக்
கொண்டிருக்கினறாயா?

இந்தியாவின் வரைபடத்தை மட்டுமன்றி, ஒழிக்கப்படாத பசி, பட்டினி, வறுமையையும் கவிதையில் சுட்டியது சிறப்பு.

மதம் அன்று நெறியாக இருந்தது. ஆனால் இன்று வெறியாக மாறி வருகின்றது. மதம் பண்படுத்தப் படைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இன்று புண்படுத்தவே பயன்படுத்துகின்றனர். காந்தி, பிறந்து வாழ்ந்த தேசத்தில் மதச் சண்டைகள் நடப்பது வெட்கக் கேடு. மதமா? மனிதமா? என்ற கேள்வி வந்தால் மனிதத்தை தேர்வு செய்வதே மனிதாபிமானமாகும். இன்று நாட்டில் நடக்கும் மதச் சண்டைகளை சுட்டும் விதமாக ரத்தினச் சுருக்கமாக வடித்த கவிதை மிக நன்று.

‘மத’ யானை வருகிறது
மனிதர்களை
மிதித்தபடி ..

.

மாமனிதர் அப்துல்கலாம் அவர்களும், இந்தியாவின் ஏழ்மை நீக்க, விவசாயம் செழிக்க, உற்பத்தி பெருக இந்தியாவில் உள்ள நதிகளை இணைக்க வேண்டும் என்று குரல் கொடுத்து உதவுகிறார். சிலர் நதிகளை சிறைபிடித்து தமிழகத்திற்கு துரோகம் செய்து வருகின்றனர். தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று குரல் கொடுத்தும் வருகின்றனர். ரத்தினச் சுருக்கமாக ஹைக்கூ வடிவில் வடித்த கவிதை மிக நன்று.

நாய்களைக்
கட்டி வை
நதிகளை அவிழ்த்து விடு!

இங்கே நாய்கள் என்பது குறியீடாக உள்ளது. தமிழகத்திற்கு தண்ணீர் தரக் கூடாது என்று மனிதாபிமானமற்ற முறையில் கூச்சலிடும் மனிதர்களையே நாய் என்று குறிப்பிடுகின்றார்.நதிகளை தேசியமயமாக்கக் கூடாது என்று சிறு பிள்ளைத் தனமாக சொல்பவர்களின் தலையில் கொட்டும் விதமாக உள்ளது .

'உன்னுடைய கதை இது' என்ற கவிதையில் ஒரு கதையையே கவிதையாக வழங்கி பெண்ணின் உணர்வை விதைத்த விதம் நன்று. முடிப்பு முத்தாய்ப்பு.

தமிழின் சிறப்பு எழுத்துக்களில் உள்ளது. எழுத்துக்களின் சிறப்பு பற்றி வடித்த கவிதை ஒன்று இதோ!

எழுத்துக்கள்!
என்னையே நான்
கண்டுகொள்ள உதவும்
கண்ணாடி
என்னை அறியாதவர்க்கு
அறிமுகப்படுத்தும்
புகைப்படம்
சில சமயம் அலைநீரில் நிழல்
ஒரு சில
சமயங்களில்

கற்களில் என்
சிலை வார்ப்பு
முகம் திருப்பிக் கொள்ளும்
பகைவரிடமும்
எனக்காக
வாதாடும்
இன்னொரு முகம்
சிலருக்கு வெறும்
நகம்
எனக்கு முகம் :

கவிதைகளால் புகழ் அடைந்தவர் கவிவேந்தர் மு. மேத்தா. அவரை நேரடியாகப் பார்க்காதவர்களும் அவரது கவிதையை படித்து இருப்பார்கள். உண்மை தான், அவரது கவிதை எழுத்துக்கள் தான் பலருக்கு அவரது புகைப்படம் என்பது உண்மை.

கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் கவிதையில் வரும் உவமைகள் ஒப்பீடுகள் எளிதில் அனைவருக்கும் புரியும் வண்ணம் இருக்கும். அதற்கு எடுத்துக்காட்டாக உள்ள கவிதை வரிகள் இதோ!

உறங்கிக் கொண்டிருக்கும்
போர்வாளைக் காட்டிலும்
ஊர்ந்து கொண்டிருக்கும்
புழு கூட உயர்ந்தது தான்!

காதலின் முன்னுரை கண்களால் எழுதப்படுகிறது. காதலியின் கண்கள் பற்றி வர்ணிக்காத கவிஞர்கள் தான் உண்டோ? இதோ கண்கள் பற்றிய மிகச் சுருக்கமான கவிதை ஒன்று.

கணக்கு!
எத்தனை தடவை
கொள்ளையடிப்பது ....
ஒரே வீட்டில்
உன் கண்கள்!

மாத ஊதியம் வாங்கியதும், மளிகைக் கடைக்கு, பால் கடைக்கு, தொலைபேசிக்கு, அலைபேசிக்கு, மின்சாரத்திற்கு, எரிவாயுக்கு என்று பணம் செலவாகும், கையில் எதுவும் மிஞ்சாசு, கடன் வாங்க வேண்டிய அவல நிலை. ஊதியம் உயர்ந்த போதும் அதைவிடக் கூடுதலாக விலைவாசியும் உயர்ந்து விடுகிறது. ஏழைமக்கள், நடுத்தர மக்கள் வாழ்க்கை நடத்துவதே பெரிய போராட்டமாக உள்ளது. நாட்டில் நடக்கும் அவலத்தை சுட்டும் கவிதை ஒன்று.

முதல் தேதி!
என்னுடைய சம்பள நாளில்
எண்ணி வாங்குகின்ற
பளபளக்கும் நோட்டுகள்ல்
எவரெவர் முகமோ
தெரியும்
என் முகத்தைத் தவிர!

கவிவேந்தர் மு. மேத்தா அவர்கள் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். அவர் ஊதியம் பெற்று செலவு செய்த உணர்வை அப்படியே கவிதையாக்கி உள்ளார். படிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் அவரவர் அனுபவத்தை உணர்த்தி உள்ளார். இக்கவிதை படித்த போது எனக்கு, ‘கையிலே வாங்கினேன் பையிலே போடல, காசு போன இடம் தெரியலை’ என்ற பழைய திரைப்படப் பாடல் நினைவிற்கு வந்தது. இது தான் படைப்பாளியின் வெற்றி ஒன்றை படிக்கும் போது அது தொடர்பான மற்றொன்றை நினைவூட்ட வேண்டும்.

மாதா பிதா குரு தெய்வம் என்றார்கள். பிதா என்ற தந்தை பற்றிய கவிதை நன்று. இக்கவிதை படிக்கும் ஒவ்வொரு வாசகருக்கும் அவரது அப்பா பற்றிய நினைவு வந்தே தீரும் என்று உறுதி கூறலாம்!

தந்தைக்கு ஒரு தாலாட்டு!

பள்ளிக்கூடம் போகாத
பல்கலைக்கழகமே
உன்னிடத்தின் தானே ...
பாடங்களை நான்
படிக்கத் தொடங்கினேன் !
பார்க்கும் கண்களுக்கு
நீ பாமரன் தான் ! என்றாலும்
ஞானமெல்லாம் உன் வீட்டில்
நடை பயில வாராதோ?
உன்னைப் போல நானும்
உருகக் கூடாதென்றா
மெழுகு விளக்கே
நீ என்னை
மின்விளக்காய் ஏற்றி வைத்தாய்?

காதல் பற்றி பாடாத கவிஞர் இல்லை, காதலைப் பாடாத கவிஞர் கவிஞரே இல்லை. முற்றிலும் உண்மை. பெரும்பாலான கவிஞர்களின் முதல் கவிதை காதல் கவிதையாகவே இருக்கும். காதலைத் தாண்டி மற்ற பிரச்சனைகளைப் பற்றியும் கவிதை எழுதியவர்களே கவி உலகில் நிலைக்கிறார்கள். கவிஞர் மு. மேத்தா அவர்களின் கவிதைகளில், காதல் கவிதை ஊறுகாய் போல மட்டுமே இருக்கும்.

காதல்!
விரித்தவர்களே
அகப்பட்டுக் கொள்ளும்
விசித்திர
வலை.

கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் கவிதைகளில் எள்ளல் சுவைக்கும் பஞ்சம் இருக்காது. எள்ளல் சுவையுடன் நின்று விடாமல் அடுத்து சிந்தித்து உணர்ந்து கொள்ளும் விதமாகவும் இருக்கும்.

சிறு குறிப்பு வரைக!

நெய்வேலி டிசம்பர் 2003

தண்ணீர் வேண்டி
பிரமாண்டமான
நட்சத்திரப் பேரணி
நடிகர்களைக் காணக்
காத்துக் கிடந்த
கூட்டம்
கவலைப்பட்டது ...
மழை வந்து கெடுத்து விடுமே என்று.

வெளிச்சம் வெளியே இல்லை என்ற தலைப்பிலான கவிதைச் சிறுகதை மிக நன்று. உள்ளத்து உணர்வுகளின் பதிவு.

நாம் வாங்கும் எல்லா இதழ்களின் பக்கங்களையும் முழுமையாக படித்து விடுவதில்லை. விடுபட்ட பக்கங்களும் உண்டு. அதனை உணர்த்திடும் புதுக்கவிதை.

ஞானம்!
எடைக்குப் போடும் போது தான்
தெரிகிறது
பத்திரிக்கைகளில்
படிக்காமல் விட்ட
பயனுள்ள பக்கங்கள் !

கவிவேந்தர் மு. மேத்தா அவர்களை புன்னகை மன்னன் என்றே சொல்லலாம், எப்போதும் முகத்தில் புன்னைகையை அணிந்து இருப்பவர். புதுக்கவிதைக்குப் புதுப்பாதைப் போட்டுத் தந்தவர்கள் என்ற கர்வம் என்றும் கொள்ளாதவர். அகந்தை என்றால் என்னவென்று அறியாதவர். இவரது புதுக்கவிதைகள் படித்துத் தான் பல கவிஞர்கள் உருவானார்கள் என்பது வரலாறு. நான் என்றும் அவரது கவிதைகளின் ரசிகன். ஆர்ப்பாட்டம் இல்லாத, அமைதியான, எளிமையான, இனிமையான மனிதர், கவிவேந்தர் மு. மேத்தா அவர்களுக்கு அவர் வாழும் காலத்திலேயே மிக உயர்ந்த விருதுகள் வழங்கி கௌரவிக்க வேண்டும் என்பது என் விருப்பம். மைய அரசு யார் யாருக்கோ விருது வழங்குகின்றார்கள்.

இவருக்கு வழங்கிட முன்வர வேண்டும். இது வாசகன் விருப்பம்.

நன்றி

அன்புடன்

கவிஞர் இரா .இரவி

(😊)(😊) மு மேத்தா (😊)(😊)